VISIT…

பாம்புக் காட்டில் ஒரு தாழை

லதா

இலங்கையில் பிறந்தவர் கனகலதா (லதா). சிறுவயதிலேயே சிங்கப்பூரில் குடியேறிய இவர் 15 ஆண்டுகளாக சிங்கப்பூர்த் தேசிய நாளிதழான 'தமிழ் முரசு'வில் துணை ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகக் கலைகள் மன்றம் வெளியிட்டுள்ள கவிதைத் தொகுதியிலும் (1995), தேசியக் கலைகள் மன்றம் தொகுத்த நூற்றாண்டுக்கால சிங்கப்பூர்க் கவிதைகள் பன்மொழித் தொகுப்பிலும் (2000), 'கனவும் விடிவும்' என்ற இந்திய சாகித்திய அக்காதெமி வெளியிட்ட தற்காலத் தமிழ்ப் பெண் கவிஞர்கள் தொகுப்பிலும் இவரது கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இவரது முதல் கவிதைத் தொகுப்பான 'தீவெளி' 2003இல் வெளிவந்தது. இவர் சிறுகதைகளும் எழுதி வருகிறார்.

மின்னஞ்சல்: latha@sph.com.sg

லதா

பாம்புக் காட்டில் ஒரு தாழை

காலச்சுவடு பதிப்பகம்

விலை 50 ரூபாய்

பாம்புக் காட்டில் ஒரு தாழை • கவிதைகள் • ஆசிரியர் : லதா • © லதா • முதல் பதிப்பு : டிசம்பர் 2004, திருத்திய மறுஅச்சு : நவம்பர் 2005 • வெளியீடு : காலச்சுவடு பதிப்பகம், 669 கே. பி. சாலை, நாகர்கோவில் 629 001 • தொலை பேசி : 91–4652–278525 • தொலைநகல் : 91–4652–231160 • மின்னஞ்சல் : kalachuvadu@sancharnet.in • அச்சுக்கோப்பு : சுதர்சன் கம்ப்யூட்டர்ஸ் • அட்டை வடிவமைப்பு : சந்தோஷ் • அட்டை அச்சாக்கம் : பிரிண்ட் ஸ்பெஷாலிட்டீஸ், சென்னை 600 014 • அச்சாக்கம் : மணி ஆஃப்செட், சென்னை 600 005.

paampuk kaaTTil oru taaZai • Poems • lata • © Latha • Language: Tamil • First Edition: December 2004, Reprinted with Corrections: November 2005 • Size: Demy 1 x 8 • Paper: 18.6 kg maplitho • Pages: 112 • Copies: 500 • Published by Kalachuvadu Pathippagam, 669 K.P. Road, Nagercoil 629 001, India • Phone: 91-4652-278525 • Fax: 91-4652-231160 • e-mail: kalachuvadu@sancharnet.in • Typesetting: Sudarsan Computers • Cover design: Santhosh • Wrapper Printed at Print Specialities, Chennai 600 014 • Printed at Mani Offset, Chennai 600 005 • Price Rs.50

Selling Rights : Sudarsan Books, 74 East of Tower, Nagercoil 629 001, Phone : 91- 4652 - 228445, Fax : 91 - 4652 - 231160, E-mail: sudarsan books@yahoo.com

ISBN 81 - 87477 - 95 - 4

11/2005/S.No.131, kcp 183, 18.6 (2) 500

கவிதைகளின் வரிசை

அணுசக்தி 11

அடுத்த நகரம் 12

மூவர் 14

உயிர்ப் பூ 16

சிங்கப்பூர் ஆறு 18

திணைப்புலன் 22

தீவாந்திரம் 24

பின்மாலை உரையாடல் 27

எதிர்பாராதபொழுது 29

விழிக்க மறுக்கும் இளவரசி 30

சூக்குமத்தில் சுட்ட பழம் 32

மௌனத் தீ 33

கறுப்புச் சாலை 34

தொலைவு 36

கரையும் கடலும் 38

இரவுப் பாடல் 41

அவன் 43

பாம்புக் காட்டில் ஒரு தாழை 45

போர்க்காலம் 47

சாசனம் 48
மொழிபெயரும் புலத்தில் 50
வெளி 52
பாடம் 53
ஒரு வீட்டின் சோகம் 54
இலை வீழ்ச்சி 55
மேய்ப்பன் 56
உலரும் இரவு 57
மென்மை 58
தடை 59
கணக்கு 60
காத்திரு 62
என்னாலா மைக்? 63
கா... கா... கா... 64
மீ கோரிங்கும் வீவக வீடும் 66
ஒழுக்கு 67
சப்பாத்துகள் 68
என் வெளி 69
காலத்தின் கையில் காலம் 70
மீள் சுழற்சி 71
தொடரும் 73
ஆற்றுப் பாடல் 75
சாத்தானின் வேதம் 77
இன்னும் மனிதம் உயிர்த்திருக்க 78
மூலை 79
மில்லேனியக் கனம் 81
காலம் காலமாய் 83
உயிர்ப்பு 84
பயங்கரவாதத் தாக்குதல் 85
வாழ்தல் 88
ஒற்றைக் கண் அரசியும்
இரட்டைத் தலை அரசியும் 89
செப்டம்பர் 11 92
விழாத மழை 94
அக்கினிச் சுவடு 96
போர்ட் கேனிங் கோட்டை வாசல் 98
பாறையில் கரைகிறது சூரியன் 100
நகர மண்டபமும் ரப்பர் துண்டும் 102
தேநீர். மதியம். குவளைகள். 107
கண்ணி வெடி 108
குடி உரிமை 109
கடந்துபோகும் மேகம் 110

♦

அணுசக்தி

கடைந்த பாலில்
மிதக்கும் வெண்ணெய்
சுழற்றச் சுழற்றத்
திரண்டெழும்

தொட்டும்
தொடாமலும்
ஒரு சிறு நரம்போடும்
நுண்ணிய வாசம் கிளர்ந்தெழ
உயிர் ஊறும்

ஒன்றாய் பத்தாய் ஆயிரம் ஆயிரமாய்
அணுக்கள் பெருகப் பெருக
எங்கும் பால் மணக்கும்

வலி ருசிக்கும் அற்புதத்தை
அறிவாயோ என் பூவே?

தெருவெங்கும் ஓடி
திசையெங்கும் கூவி
இறக்கை விரிக்கும் உலகம்

எல்லாம்
எல்லோரும்
வண்ணத்துப் பூச்சிகள்

எத்தனை கோடி இன்பம்!

அணுவைத் துளைக்கத்
தாங்குமா என் சிறு பூ?

ஒரு நொடியில்
மூச்சடைத்து
வீழ்ந்து மரிக்கும்
கரப்பான் பூச்சி.

♦

அடுத்த நகரம்

இருமருங்கும் செம்பனை
இன்னமும் பூக்காத குரும்பனை
கண்மூடிச் செல்லும்
கண்ணாடிப் பாதையில்
நடந்தேன்

பெரும் பரப்பின் வாகன விரைசலில்
காற்று என்னைத் தூக்கி எறிந்தது
விரைவுச் சாலையில்
நடந்து செல்பவர் யாருமில்லை

உயர்ந்து விட்டிருந்தன
இரட்டைக் கோபுரங்கள்

நெடுந்தூரம் கடந்து வந்த
கடைத்தெருக்கள்
மதியத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தன

ஒரு கவளம் சோறு

வினோதமாகப் பார்த்த அவர் சொன்னார்

இரவு வரை பொறுத்திரு

நாகரிக நகரில் பழங்கால மனிதர்களுடன்
மாலை வரை நடந்தேன்

வழியெங்கும் மழை

நகரைச் சூழ்ந்துள்ள
அடர்ந்த காடுகளின் வாசம்
காலமற்ற காலத்திலும்
கனத்துச் சொரிந்தது

வேக ரயில்களுடனும்

தூறும் மழையுடனும்
தொடர்ந்து நடந்தேன்

சோழர் காலத்துக் கத்திகளைப் பிடுங்கிவிட்டு
ரப்பர் மரத்தில் காய்த்த கரங்களை
நகரத் தெருக்கள்
நெடுகிலும் தொங்க விட்டிருந்தனர்

கார்ச் சாரதிகள் அன்றும்
கண்ணதாசனின் கீதைகளைக்
கேட்டுக் கொண்டிருந்தனர்

பாலும் தீச்சட்டியும் சுமந்து சென்றனர்
மஞ்சள் குளித்த முகமும்
செந்நிறக் கூந்தலும் கொண்ட பெண்கள்

ஒற்றை விளக்கில் ஒளிர்ந்த
மாளிகையில் மேள இசையுடன்
விருந்து முடிந்த பின்
கொண்டை ஊசியை
தட்டில் ஏந்தி வந்த அவள் சொன்னாள்
நடந்து கடக்கும் பாலம்தான்
நமக்கிடையே.

♦

மூவர்

வந்துபோகும் ரயில்களும்
தொலைபேசி அழைப்புகளும்
மணி பார்த்தலுமாய்
நசநசத்துக்கொண்டிருந்தது பிற்பகல்

கனத்த பார்வையோ கண்ணீரோ
மௌனப் பேச்சோ இல்லை

மீந்துபோன ஆணுறைகளைப்
பரிசளித்த உன் அக்கறையும்
மகிழ்ச்சிகளைக் குறிப்பெடுக்க
அனுமதித்த என் நேசமும்
சுற்றிலும் நிறைந்திருந்தன

இந்த நிலையத்துக்கு வர
இனித் தேவையிருக்காது
என்பதை இயல்பாகச்
சொல்லிக் கொண்டோம்

அப்போது அவன் வந்தான்

எல்லாப் பயணிகளையும் போலவே
பயண அட்டையைப் பத்திரப்படுத்திவிட்டு
வண்டி வருகிறதா என
எட்டிப் பார்த்தபடி நின்றான்

பெரிய பூங்கொத்தும்
கேக்கும் பன்களும் நிறைந்த பையும்
அவன் கையில் இருந்தன

வெளியில் கரைந்து கொண்டிருந்த
என் பார்வை தற்செயலாய்
அவனில் கலந்தது
நீயும் அதில் இணைந்தாய்

ரயில் வந்தது

நாங்கள் விடுபடுவதற்குள்
அவன் விழிகள் தெறித்து விட்டன
கேக்கும் பூக்களும் சிறு சுவரில் மோதிச்
சிதைந்தன

அறுபடாத
குருதி இழையும்
குறு நரம்புமாய்

ஓரச் சுவரைப் பிடித்தபடி
கரையேறத் தவித்தது
ஒற்றைக் கரம்

எதையோ சொல்ல வந்த
உன் கைகளை
நீ உள்ளிழுத்துக் கொண்டாய்

மாற்றுப் பயண ஏற்பாட்டுக்குக்
காத்திருந்து நான் கிளம்பினேன்

மஞ்சள் கோட்டுக்கு உள்ளே
எங்களை விளித்தபடி
உயிர்ப்போடு அவனது
விழித்துண்டு.

♦

உயிர்ப் பூ

அம்மா அங்கு போனபோது
அவள் பறந்து கொண்டிருந்தாள்

மரங்களும் நிழலும் இல்லாத
நகர்ப்புறத்தின் பட்டாம்பூச்சியாய்
அவள்
புழுதி மண்டிய தெருக்களில்
சிறகடித்துத் திரிந்தாள்

நெருப்பு தேடி வரும்போதும்
நீர் அள்ளி வரும்போதும்
அவள் பாடினாள்

இட்டுக் கட்டும் அவள் பாடல்கள்
கேட்க
வசந்த காலத்தில் சாம்பல் புறாக்கள் கூடின
மழைக் காலத்தில் பழுப்பு அணில்கள் சேர்ந்தன

கோழி, பூனை, நாயோடு ஒரு பத்து உயிர்கள்
உயிர்த்திருக்கும்
சாம்பலும் பழுப்பும் அழுக்கும் நிறைந்த
ஒளியற்ற சிறு தடுப்பு அவள் வீடு

பசி எடுக்கும்போது
கண்ணாடி வளை அணிந்து
அவள் ஆடும் நடனம் கண்ட
அம்மாவின் கருணை பொங்கியது

துடிப்பும் உயிர்ப்பும் நிறைந்த
அந்தப் புன்னகையை
அம்மா அள்ளி வந்தாள்.

பெரும் பரிவோடு
தோட்டத்தின் நடுவே உள்ள
மாளிகையில் மாட்டி வைத்து

எங்கள் வானத்தில்
வண்ணம் தீட்டச் சொன்னாள்

மாடிப் படிகளில் ஏறி இறங்கும்
பிஞ்சுப் பாதங்களில்
அவளின் சிறகுகள் நசிந்தன

அவள் சேகரித்து வரும் பூக்களும்
மாட்டி விடும் திரைச் சீலையும்
நிறமிழந்து தொங்கின

உணவு நிறைந்த மேசையில்
சோர்ந்திருந்த பாடல்
அம்மா கேட்ட
இசையை எழுப்பவே இல்லை

என்றாலும்
பவளப் பாறை நிறைந்த
கடலில் மட்டுமே
மீன்கள் நீந்த முடியும் என்று
அம்மா இன்னமும்
நம்பிக் கொண்டிருக்கிறாள்.

♦

சிங்கப்பூர் ஆறு

ஆற்றை நிறம் மாற்றும்
மஞ்சள் வாத்துகள்

நெருக்கியடித்து ஓடும் மில்லியன் வாத்துகளில்
முந்துவது யார் வாத்து?

முடி இழந்த 'பிளம்பாங்' இளவரசருடையதா?
இல்லை
நாடு கடந்த சோழ இளவரசருடையதா?
இல்லவே இல்லை
ராபிள்ஸ் வாத்து?

இரவு பூச்சூடும்
மதுவும் இசையும் பல்வகை உணவும்
வழிந்தோடும்
சிறு ஒளி சிந்தும் படகுகளில்
வலம் வரும் வாத்துகள்.

வாத்துகளும் பன்றிகளும்
மேய விட்டு
சணல் புதரில் அவன் ஒதுங்கினான்
ஓடக்காரனுக்குக் கொடுக்க
ஊரில் பெண் போதாது

ஆனாலும்
ஓடம் அவன் கையில்
வாழ்வும் அவன் கையில்.

சரக்குக் கிடங்குகளும் பலகை வீடுகளும்
கரையிருக்க
சலவைக் கழிவு சுழித்தோடும் ஆறு
அப்போது கறுப்பு

அதற்கு முன் அங்கிருந்த
கல்லும் கறுப்பு

ஆதி முதல் தமிழன்
தலையெழுத்தோடு
ஆறு அணையும் கடலோரம்
சமைந்திருந்தது கரும்பாறை

அதில் சாய்ந்திருந்த வால்மீன் பிடிக்க
வெடி வைத்தனர்
வெள்ளைச் சிப்பாய்கள்
வாய் பிளந்த 'சிங்கப்பூர் கல்'
திசைக்கொன்றாய் பறந்தது
ஆற்று நாகரிகத்தின்
ஆரம்பக் கதையை விழுங்கிவிட்டு
சிங்கத் தலையோடு எழுந்தது மீன்.

மீனோடு கடலோட
தொடர்ந்தது கதை
குப்பை சுமந்து வரும்
கைதிக் கூலிகள்
நீர் அடைத்து நிலம் சமைக்கிறார்கள்
அவர்கள் கறுத்த மேனியில்
கலந்து ஆறும் பாடும்
"கிளிங் கிளிங்"

நாவாய்க்குறட்டில்
பொழுது சாயக் காத்திருப்பர்
தற்கொலையாளர்கள்

கோபத்துக்கு ஒரு சாவு
கொடுமைக்கு ஒரு சாவு என
நாளும் உடல் சுமந்து ஓடும் ஆறு.

நகரின் ஒற்றைப் பெருவழி ஆறு
ஆறு நிறைத்துத் தோணி
தோணி எங்கும் தென்னாடு உடைத்தோர்

அவரோடு
இரவு இரவாய் கள் குடித்து
தெம்மாங்கு பாடும் எருமை

கருணையற்ற மேகம் கவிழ்ந்த
நடுச்சாமம் ஒன்றில்
தோணிகள் தற்கொலை செய்துகொண்டன
துடுப்பை எறிந்துவிட்டு தோணிக்காரன்
கடலேறினான்
இரவோடு இரவாய்
அணைகரை திசைமாறியது

பொழுது விடிய
புதுப் படகும் தொப்பியும்
புடைசூழ வந்தான் பெருங்குடியினன்
அவன் விசையில் வீறுகொண்டது
ஆறு

என்றாலும்
விலகிப் போனது கடல்

கதையாய்ப்போனது
பெருங்கதை.

மொழிச் சுத்தம் நதிச் சுத்தம்
ஆற்றுக்கு வெள்ளையடித்த வண்ணாருக்குத்
தங்கப் பதக்கம்

துடைக்கப்பட்ட முகத்துவாரத்தில்
சிங்க மீன் பீடம் அமைக்க

வெற்றித் தந்தையின் வீர முகத்தோடு
வளர்ந்தது புதுப் பாறை
அதன் கறுப்பை மறைத்த மஞ்சளில்
ஒளிர்கிறது புது வரலாறு

முரசம் அதிர முண்டியடித்து
முன்னேறும் கடல் நாகப் படகுகளில்
எந்த நாகம் வெல்லும்?

கூத்தும் களிப்பும் ரசனையும் கொழிக்கும்
தேசிய நீரோட்டம் என்கிற
தோற்ற மயக்கம்

எனினும்
எக்காலத்திலும்
நாட்டின் உயிர்க் கொடி பிடித்தோடும்
இந்த ஆறு

கங்கை நதியோ நைல் நதியோ
மஞ்சள் ஆறோ அல்ல
கடலடுத்து சிறுதூரம்
வடிநீரோடு கலந்தோடும்
வெள்ள வாய்க்கால்
இதுவே
வரலாறு பேசும் பேராறு!

♦

திணைப்புலன்

தீக்கிளறும் உராய்வுகளைக்
கவனத்தோடு தவிர்த்தபடி
தெருச் சுவரில் அமர்ந்தோம்

வழமைபோல் அன்றும்
வழிபாடு எங்கள் முகங்களைக் கீறியிருந்தது

பாவத்தின் பிறப்பாகிய நீங்களே
பூமியின் பாரம் தாங்க வேண்டும்

வேதங்கள் வேறு என்றாலும்
சாரம் ஒன்றுதான்

தெருவை மறைத்த புகை மூட்டத்தில்
மறுபுறம் இருந்தவள் உரத்துப் பாடினாள்
தளதளத்திருந்தது வயல்
சப்பாத்துக் காலுடன் அவர்கள்
வயல் அழிந்தது நிலமும் அழிந்தது

முகம் சிவந்து தெரு பதுங்க
நாங்கள் கிளம்பினோம்

பனிக்காலத் தோற்றமென
நகரை நிறைத்த நுரைப் பஞ்சுகளும்
சாலை மரங்களின் வண்ண மின் பூக்களும்
காற்றைச் சூடேற்றின

நகரம் உறங்கிய பின்
உலாக் கிளம்புவது
தேவதைகளா சைத்தான்களா?
என்றபடி எதிரில் இவன்

அன்றைக்குத் தீ மூட்ட
சிக்கிமுக்கிக் கல் தேடும் இவனிடம்
இனியும் தோற்பதற்கில்லை

இரவுக்குள் ஒளிந்திருந்த
அவள் கண்களைத் தேடி எடுத்தேன்
'எந்தப் போருமே
முடிவற்ற போர்களையே தொடங்கி வைக்கிறது'

அவள் பனி மூட்டினாள்
காலம் கலைக்காத தடங்களை
அதில் எரித்தாள்
யுகங்களாய்
நடந்த களைப்பில்
நொந்த பாதங்களைத் தன்
கூந்தலால் நீவினாள்

ஊரடங்கு உடைத்துப் புறப்பட்டோம்
நிழலில் கட்டுண்டிருந்த வீடுகளை
அவிழ்த்துவிட்டபடியே நடந்தோம்
இரவுகள் பல கடந்து
வந்தது அவள் வீடு.

சுவர்கள் அற்ற அதனுள்ளே
அறைகளும் இல்லை

காற்று இழைக்கும் அரங்கில்
ஆடலாம் வா

காற்சிலம்பு களைந்து நாங்கள்
வான்வெளி இறங்க
விடிந்தது பொழுது.

♦

தீவாந்திரம்

சலனமும் தெளிவும் உறைந்து இருந்த
பெரும் வெளியில் நெருப்பு

காடும் கடலும் தாண்டி
நாட்டுக்குள் வந்தது அது

மரங்களோடு வளர்க்கப்பட்டுள்ள
அடுக்குமாடிகள் அடியில் புதைந்திருக்கும்
இடுகாடுகளைத் தீண்டும் ஆசை
அதற்கு ஒரு போது இருந்தது

ஆனால் ஏழாவது மாதம்
பூமி திரும்பும் ஆவிகளை
மகிழ்வூட்டும் வேலையை
மக்கள் அதனிடம் தந்துவிட்டிருந்தனர்

ஆவிகள் உடலோடு இருந்த நகரம்
பார்த்திருக்கிறது அது

காடும் கடலும் அழித்துச் செய்த
மாயத் தீவு
அதனடியில் தூங்குகிறது
பெருந்தலை நாகம்

கோபத்தோடு கடல் சீறிய ஒரு பொழுதில்
நகரின் மீனவர்களை நாகம் விழுங்கியது

இறந்துபோன மீன்கள் காற்றின் வழி அடைக்க
மரங்கள் தாமே எரியூட்டிக்கொண்டன
வழித் தடங்கள் அனைத்தையும்
நாகம் தின்று தீர்த்தது

நகரெங்கும் செஞ்சாந்து பூசினர்
படகில் தப்பி வந்தவர்கள்

தீவுக்கு அப்பால் அமிழ்ந்து போனவர்களின்

ஆசைகளும் கனவுகளும்
அடர்ந்த சிவப்பில் கரைந்தன
புதிய கதைகள் கடலை வளைத்தன

காலம் அழித்த தீவில்
சொர்க்கம் முகிழ்த்தது

தேவர்களாகிப் போன தீவாந்திரிகள்
பூதகணங்களை வாங்கிக் குவித்தனர்

கறுத்த பூதங்களின் தலையைப் புதைத்து
முளைத்தார் கடவுள்

அவ்வப்போது
ஒரு நகைப்போடு உறுமிப் பார்க்கும்
பெருந்தலை நாகத்துக்கு
பரிவாரங்களைக் கடவுள் காவு கொடுத்தார்

கடலோரம் நடப்பட்ட
கழுமரங்களில் பறந்தது
செம்புகை படிந்த வெண்கொடி

அதன் இசையில் ஒளிந்திருந்த செந்நீர்
ஆயிரம் கதையோடு வந்த
பெருந் தீயை
அணைத்து விடுகிறது

துடைக்கப்பட்ட வெளியில்
மீனவர் இல்லை
கடவுள் இல்லை
பூதகணங்களும் இல்லை

வானம் கடந்து
வாளோடு வந்தவர்
காலடியில் மூழ்குகிறது நகரம்

எட்டாத உயரத்தில்
நாகம் கொண்ட மீனவரின்
குடிசைக் கால்கள்

ஓர் உயரக் காலின் உச்சாணியில்
புன்னகைத்தபடி
சங் நீல உத்தமன் கடலில் எறிந்த
மணி மகுடம்.

♦

பின்மாலை உரையாடல்

ஆறு மணிக்கு அலாரம் வைத்திருக்கிறேன்
ஏழு மணி ஆகிவிட்டால்
சாலைக் கட்டணம் எகிறி விடும்

கீழ் வீட்டில் என்ன சத்தம்?
நாளைக்கு மறக்காமல்
நகர மன்றத்தைக் கூப்பிடு

மின்தூக்கியைச் சரிசெய்ய ஒருநாளா?
கடிதம் எழுத வேண்டியதுதான்

உன் கணக்கில் எவ்வளவு
தொகை இருக்கிறது?
காரை மாற்றி ஒரு வருஷம் ஆகிவிட்டது

என் 'போனை'யும் மாற்ற வேண்டும்
புது 'மாடல்' வந்திருக்கிறது

உன் மகளை வேலை தேடச் சொல்
எத்தனை நாளைக்குச் சோறு போடுவது

அவளோடு வெளியூர் போனீர்களாமே
செலவு எவ்வளவு?

வீட்டு விலை இறங்கியிருக்கிறது
இதை விற்று, தரை வீடு வாங்கலாம்

பணிப்பெண் அமர்த்தப் போகிறேன்
தீர்வை குறைந்திருக்கிறது

வேறு 'டியூஷன்' டீச்சர் பார்க்க வேண்டும்
பிள்ளையின் மதிப்பெண்கள் கூடவில்லை

வீட்டு நம்பர் எடுத்தாயா
மூன்றாம் பரிசு பட்டிருக்கு பார்

வாசலில் ஊதுபத்தி கொளுத்தி வைத்தால்
அடுத்த வீட்டுக்காரி முறைக்கிறாள்

ஏன் முன்னமே சொல்லவில்லை?
நாளை முதல் பார்
ஒரு கட்டு கொளுத்தப்போகிறேன்

ஏன் வீண் சண்டை

நம்ம தமிழவங்களே இப்படித்தான்
அதனால்தான் இப்படி இருக்கிறோம்

உங்களுக்குத்தானே
அந்தப் பதவி கிடைக்க வேண்டும்
ஏன் இந்த வருஷமும் இல்லை?

அதையெல்லாம் கேட்க முடியுமா?
யார்தான் தோல் பார்க்கவில்லை?
நீ வாயை வைத்துக்கொண்டு சும்மா இரு

சரிதான் போ
சாமி பார்த்துக்கொள்ளும்.

♦

எதிர்பாராதபொழுது

பட்டாம் பூச்சியாய்ப் பறக்கும்
உன் துடிப்பில்
எத்தனை யுகங்கள் உயிர்த்திருந்தேன்

சிலிர்க்கும் புயலாய்
உன் வேகம்
என் கணங்களை
அர்த்தப்படுத்தின

அன்று இரவு கண்ணாமூச்சி
விளையாடிக் கொண்டிருந்தபோதா
உன் கால்கள் வளர்ந்தன?

நீ பொறுக்கி வந்த உடைந்த பொருட்களும்
தெருச் சண்டைகளும்
இன்னமும்
ஒட்டப்படாமல் கிடக்கின்றன

உனக்கும் நிலவுக்கும் உருட்டி வைத்துள்ள
சோற்று உருண்டைகளை
என்ன செய்யட்டும்?

♦

விழிக்க மறுக்கும் இளவரசி

வழக்கம்போல் இன்றும் வருவாய்
வலியின் மென்மை முகமெல்லாம் பூக்க

உனக்காகக் காத்திருக்கும்
ஆர்ப்பாட்டம் செய்யாமல் பரிவாரங்கள்
உன் அழகான ஆளுமையைத்
தேய்ந்துபோன செருப்புக்குள் அமுக்கி
தேகத்தின் வாசனை தூவுவாய்
வேறுபாடற்று அனைத்துக் கைகளிலும்

வீட்டுக் கடிகாரம் போல
உன் விருப்ப வேகத்தில்
உபசரிப்பையும் உச்சுக்கொட்டலையும்
பாசாங்கின்றிப் பரிமாறுவாய்

உன்னை நோக்கிய
அட்சயபாத்திரத்தின் கருணைத் தீ
பிச்சைப் பாத்திரங்களிலும் பரவித் தகிக்கும்
மேலும் கீழும் ஓடிச் சோர்வுறும் வார்த்தைகளில்
தேடுவாய் தீர்வாய் ஒன்றை

எல்லா உயிர்களைப் போலவே உனது
இலக்கும் சுவாசித்தல்தான்
வாசல்களும் சன்னல்களும் நிறைந்த
இந்த உலகத்தின் எந்த இடத்திலும்
உனக்கு மூச்சு முட்டுகிறது
காற்றே இல்லாத உன் கருவறை தவிர.
இருளருள் நிறைந்த கூட்டுக்குள் நீ
சுருண்டுகொள்ள முயலும்போது
தொடுவான விளிம்பைத்
தொட்டுவிடும் உன் கால்கள்

சுகங்களும் சோகங்களும்
சுத்தமாய்த் துடைக்கப்பட்ட

உன் மேசை எதிரே
அமர மறுக்கும் கவிதைகளின்
வருத்தம் நன்றாய்த் தெரியும் உனக்கு
இருந்தும்
கனிச்சத்து சேர்ந்த தண்ணீர் கொடுத்து
ஆரோக்கியமாய் இரு என்பாய்

பிறகு
கணினித் திரையில் கரைய முடியாத
சிந்தனைப் பந்தை உருட்டிக்கொண்டே
இரவுச் சூரியனுடன் கிளம்புவாய்
நாளைப் பூவுக்கு நீரூற்ற.
காலைவரை இசைந்து
வழக்கம்போல இன்றும்.

♦

சூக்குமத்தில் சுட்ட பழம்

அதிகாலைப் பொழுதொன்றில்
நீண்ட என் விரல்கள்
அலுக்க வைத்தன.

ஒருபோதும் நான்
அறிந்திருக்கவில்லை
பால் பேதம்
சோர்வு தரும் என்பதை.

அதிகாலை சொன்னது,
சொர்க்கமும் நரகமும்
இடைப்பட்ட காலத்தில்
இயல்பாய் ஒரு சுவாசம் உள்ளதாய்.

பாலற்று பேதமற்று
மீன்களின் நகல்களாய்
சக்தியும் சிவனும்.

சக்தியைவிட சிவனைவிட
நிச்சயமான காலையிடம்
நீட்டினேன் என் விரல்களை
தண்டனைகள் கோர்த்தது காலை

நகப்பூச்சு வாசனையில்
மயங்கி விழுந்து எழுந்தபோது
அழகிய கறுப்பு விரலாய் என்னுடல்
இரவு விடிய
பறக்கத் தொடங்கியது.

என் பெண்கள்,
அவர்கள் பெண்கள்,
அவர்கள் பின் வரும் பெண்களில்
எங்காவது ஒரு முடிச்சில்
ஒத்துக் கொள்வார்கள்
அலுத்துப் போகும்
அதிகாலை பற்றி.

♦

மௌனத் தீ

உயிர் குடித்தல், உருகி உயிர் வடித்தல்
ஒரு சேர சாத்தியமான தருணத்தில்

மலை முகடுகள் பனி மூட்டத்திலும்
நிகழ்காலம் இலைப் பச்சயத்திலும்
மூடிக்கொண்டிருந்தன

மூக்கணாங் கயிறு சுகத்தில்
மூக்குத் துடைக்க மட்டுமிருந்த ஒன்று
விதிர்ப்பின்றிச் சன்னமாய் விரிந்து
காற்றசைக்காது பறந்தது

காயங்களில் இதமாய்க் கத்தி தடவி
அலைகள் வீசியெறிந்த நட்சத்திரங்களிலும்
மண்டியிட்டு வழங்கிய
வெள்ளைப் பூவிலும்
அது
குமிழி குமிழியாய்க் கொப்புளித்தது

அர்த்தங்களும் அனர்த்தங்களும்
தூர்ந்து போக
கணிப்புகள் பாசி படர்ந்த
கற்களாய்க் கண்ணடித்தன.

தனிமை அறுபட,
அது அலறத் தொடங்கியது

தீயில் விறைத்து நின்ற காலம்
நீர்த் தூவலில் வெடித்துச் சிதற
விழிகள் உயிர்பெற்று விடைபெற்றன.

நொடிகள் மடிந்துபோன பின்னும்
இன்னும் சுவாசம் வேண்டி
அது மட்டும்
அடம் பிடித்துக்கொண்டிருக்கிறது.

♦

கறுப்புச் சாலை

மரம் வெடிக்கும் உச்சி வெயில்
பொழுதாகவோ, மழை கொட்டும்
மாலையாகவோ இருக்கலாம்
ஒரு சுகமற்ற பொழுதில்
நகரைக் கிழித்து நடந்தனர்
கருந்திடத்தோள் தேவர்கள்

அவர் இட்ட அடியில்
எழுந்தது ஒரு பெரும் பாதை
இரவுத் தூக்கத்திற்கும்
மறுவேளைச் சோற்றுக்கும்
தவம் இருக்கும் எளிய மக்களின்
சாதாரணக் கனவோடு.

அந்தப் பெருங் கனவின் மீது
பொதி சுமந்து ஓடிய
மாடுகளும் மனிதர்களும்
சப்பித் துப்பிய ரத்தம்
பாதையின் ஓரச் சுவர்களில்
கல்தோன்றி மண்தோன்றாக்
காலக் கதையை
வரைகிறது

மல்லிகைப் பூ, மசாலாத் தோசை
பட்டுப் புடவை
தொலைபேசி அட்டைகளின் கூவல்
எது?

தெரியாது

இருண்டிருக்கிறது

எனும் நாடாளுமன்ற உறுப்பினருக்குத்
தெரியாது.

பரபரக்கும் சனிக்கிழமை மாலை
பட்டுத் தலைப்பாகையும்
சிவப்பு மாலையும் சூடி வந்தது
ஒரு மஞ்சள் கரம்
அதன் விரல் அசைவில்
சிந்தியது பேரொளி

பளபளத்த தெருவை
வியக்கும் அவர்.
பிரமிக்கும் மக்கள்.

கறுப்புச் சாலையின் மன்னர்
வாய் வழிந்த
வெற்றிலைச் சாற்றில்
சிவந்து நிற்கும்
அவரின் வெள்ளை 'பென்ஸ¤'க்கும்
தெரியாது

வெள்ளையும் கறுப்புமாய் அங்கு
கொக்குகள் பறந்த காலம்

பாதையெங்கும் பிதுங்கி வழியும்
கடைகளை
ஊடறுத்து வரும் காற்றிடம்
உள்ளது வரலாற்றின்
உயிர் முடிச்சு
என்பதும்.

♦

தொலைவு

ஒருநாள் தூரத்தில்
உன் மலை
அதில் செறிந்துள்ளது முல்லை

மலை அடியில்
அலை சீறும்
நிலம் எகிறும்.

குறுந்தகவலோடு விரையும் ரயிலில்
ஏறி இறங்கும் மனிதர்கள்
காலடியில்
கரைகிறது காலம்

தரை விரிக்காத மலை முகடு
காற்றும் மழையும் வெப்பமும்
தொடாத சிறுகற்கள்
அதனூடே
கிறங்கின கணங்கள்
நெகிழ்ந்தன விழிகள்

ஊர்ந்து ஊர்ந்து உன் விரல்கள்
உயிர்ச்சுழி பற்ற
மரித்தேன்
வாழ்தல் அறிந்த
மலையும் நிலமும்
அலையில் கரைந்தன.

ஒரு நூறு ஒளி ஆண்டுகள்
கடந்து
விழித்தேன்
பனி எரிக்கும்
தனி நிலத்தில்.

நீயோ
தீ உறங்கும்
பிறை நிலவில்

பிரிவுத் துயரில் உறையும் வெளி பற்றி
எவருக்கென்ன.

♦

கரையும் கடலும்

கூட்டம் நிறைந்த பெருஞ் சந்தை
சந்தை வைப்போரின் குடில்கள்
தோட்டமும் பெருங்கதவும் கொண்ட தனி வீடுகள்
பறவைகள் நிறைந்திருக்கும் ஆலமரம்
பெரிய மைதானம்
பூனைகள் பெருகும் திரையரங்கு

பிறகு வரும்
கடற்கரை

கருங்கல் தடுப்புத் தாண்டி
படர்கொடியும் கள்ளிச் செடியும் கடந்து
உலர் மணல் நடந்து
ஈர மண்ணில் வந்து நிற்க
பொங்கி எழும் அலை
காலைக் கடிக்கும் நண்டு
ஒதுங்கியிருக்கும் நைந்த ஓடங்களில்
ஓடித் திரியும் எலிகள்

வறுத்த கடலையும்
கை வழியும் சிப்பிகளும்
பாட்டியின் கதையுமான
அற்புதப் பொழுது ஒன்றில்
முதலில் பார்த்தேன் அவனை

கையில்லாத பனியனையும்
பாதி முடிந்த பீடித்துண்டையும்
இழுத்து விட்டபடியே
வெள்ளைத் துரைகள் பின்னே போனான்
யாருமற்ற தெற்கை நோக்கி.

❍

சைக்கிள் ஓட்டமும்
இறைச்சி வாட்டலும்
விரைவுச் சுகங்களும் நிறைந்திருக்கும்
கடற்கரை

தார்ச் சாலையைக் கடந்ததுமே
எட்டி விடலாம்

அலை துள்ளாத ஆழக்கடல்
அதில் தோய்ந்து வரும்
வாசமில்லாக் காற்று

விரல் கெடாமல்
ஐஸ்கிரீம் விழுங்கிக் கொண்டிருக்க
அவன் வந்தான்

பீர் போத்தல்களையும்
நனைந்த பேப்பர்களையும்
பொறுக்கிக்கொண்டு போனான்

நிலவு தெற்கே போக
திரும்பி வந்தான்

அவன் முன்னே
குதி செருப்புப் புதைய அவள்.
மணலில் சரிந்த பின்
அதையும் கழற்றி எறிந்தாள்

ஆளற்ற கரையைப் பார்த்தபடி
அவள் விரல்களை
அடுக்கத் தொடங்கினான்.

❍

நகர்ப்புறத்தை அடுத்திருக்கும்
பெருங் காடு
தன் போக்கில் வளர்ந்திருக்கும் தென்னை
வழி தடுக்கும் மிளகுச் செடிகள்
எட்டிப் பார்த்துச் செல்லும் மீன்கொத்திகள்

மெல்லக் கடந்து வர
பெருவெளியில் விரியும் கடல்

பார்த்துக்கொண்டிருக்க
வட்டமாய்க் கவிழும் இருள்
வானும் மணலும்
நட்சத்திரங்களை ஒளியூட்டும்

சிலிர்த்தெழும் அலைகளில்
நுரைக்கும் காற்று

மதுவில் ஊறித் திளைத்த கீதம்
சங்குகளில் வழிந்துகொண்டிருக்க

மீண்டும் அவன் வந்தான்

இடுப்பில் படகைக் கட்டி இழுத்து வந்த
அவன் கழுத்தில்
ஒரு மீன் தொங்கியது

கழுத்தோடு மீனை விழுங்கியபின்
வலையைப் பிரித்தான்

அதன் சின்னஞ் சிறு கட்டங்களில்
நான் ஒளிந்திருப்பதைக் கண்டேன்

கலைந்துபோனது உலகம்.

♦

இரவுப் பாடல்

இரைச்சலற்று நீட்டிப் படுத்திருக்கும்
கடலின் கரையை
ஒரு வேலையாளின் இறுக்கம்
வலிந்து பிடித்திருக்கிறது.

கரையை வளைத்துத்
தகர்க்க முடியாத கோழி இறகுச் சுவர்

கடத்தல்காரர்கள் எப்போதும் வருவதில்லை
நிலவும்
கரையோர நுண்கதிர் காமிராக்களும் காய்கின்றன
என்றாலும்
இந்தப் பன்னிரண்டு மணி நேரத்தில்
எதுவும் நடக்கலாம்

எந்தக் குழப்பமும் இல்லாத
சாசனம் வாசிக்கப்படுகிறது
பின்னர்
அட்டவணையும் குறிப்பெடுக்க ஒரு தாளும்
தரப்படுகின்றன

கேள்வியில்லாத மொழி,
கேள்வியில்லாத விழிகள்
அங்கொரு பெருங் கேள்வி எழுகிறது

அக்கரைக்கும் இக்கரைக்கும்
மிதக்கும் உடல்
இரு கரையும் காத்திருக்கிறது
கடல் கழுகுக்கு

உள்ளும் புறமும்
வெடிப்புகள் கொப்புளிக்கின்றன

சுதந்திர நாட்டின் மக்கள் அனைவருமே
காக்கும் கடவுள்கள்

கறுப்புப் பையுடன்
நாடு தேடுபவர்கள்
மூச்சு உள்ளவரை உனக்கு
அடங்கிய பின் எனக்கு

கடலைத் துழாவிக்கொண்டிருந்த
தொலைநோக்கி
வட்டமாய்ச் சுழலும்
ஐந்து நட்சத்திரங்களிடம்
திரும்புகிறது

சதுரங்கத்தில் குளிர்காயும்
காவல் படகுகள்
எப்படியும்
தூங்கப் போவதில்லை.

♦

அவன்

போனவன் யாரென்று
கேட்கிறார்கள்

நகரும் படிகளில்
அலுங்கல் இல்லாமல்
ஏறிச் சென்று
மறைகிறவன்
மறைகிறவன்
மறைகிறவன்
மறைகிறவன்...

வாசல் கோலத்தில் உட்கார வைத்த
சாணிப் பிள்ளையாரா என்ன
காய்ந்து உதிர்ந்து
கடலில் கரைக்கும்வரை
தவமிருக்க?

ரத்தமும் சதையும்
சதை பிடிக்க உணர்வும்
உணர்வூரும் களியும்
தளும்பித் தவிக்கும்

ஒவ்வொரு பிண்டத்திலிருந்தும்
வந்தவன்
வந்தவன்
வந்தவன்
வந்தவன்...

யாரென்று வரைவது?

ஒரு கறுப்பு ஒரு வெள்ளை ஒரு கோடு
என வரையறுக்கும்
ஒற்றைப் பரிமாணம் அல்ல

பேச்சழியும் இசையில்
இசைமறுக்கும் ஞானத்தில்
ஞானம் விளைந்த மோனத்தில்

முப்பத்திரண்டு படிகளிலும்
இருபுறமும் இருக்கிறான்
ஒவ்வொரு கதையும் கேட்டு
எல்லாப் பதிலும் சொல்லி
விக்ரமாதித்தன் சிம்மாசனத்தில்
ஏறி நான் அமரும் வரை

கேட்டுக்கொண்டே இருப்பார்கள்
யாரவன் என்று

அதுவரை
சிறு இடறலுக்கும்
கீழிறங்கி விடும் வேதாளத்தைக்
கொம்பில் ஏற்றிக்கொண்டே
இருக்க வேண்டும்.

♦

பாம்புக் காட்டில் ஒரு தாழை

வால் மீது வால் வைத்து
மெல்ல நழுவிச் செல்கிறது

ஊர்வது தெரியாதிருக்க
ஒளித்துள்ள
இறக்கைகளை
ரகசியமாய் விரிக்கிறது

பச்சை அழியாத
பசும் தாழை.
மலராத மடல்கள் இடையே
இன்னும் ஒட்டியிருக்கிறது
வாலைப் பிசின்.

வாசனை தெரியாது
காற்றின் இசையும் அறியாது
ஒன்றே குறியாய்
பார்வை மட்டும் பாய்ந்தோட
தோலை நிமிர்த்துகிறது.

வாசம் விரியாத
மடல் பிரித்து
தலை நுழைக்கிறது
அரையடி மடலுக்குள்
முழு உடல் சுருக்கி
ஒவ்வோர் மடலிலும்
சுருண்டு கிடக்கிறதொரு பாம்பு

சுமை பெருகப் பெருக
ஓங்கி வளர்கிறது தாழை
வீங்கி விளைகின்றன பாம்புகள்

புசுபுசுத்து நிற்கும்
மடலோரம் சிறு கூர் முட்கள்
காற்றில் வளைந்து
பாம்பின் விஷம் குடிக்கின்றன

நஞ்சேறிய மென் தாழையின்
மஞ்சள் ஒளி
வானெங்கும் படர
ஓவெனப் பெய்யும் மகரந்த மழையில்
குட்டிகளாகி விடுகின்றன பாம்புகள்

வெளி எங்கும் பாம்பு

மடல்களை உதிர்த்த தாழை
ஒற்றைத் தண்டுடன்
வளர்கிறது

♦

போர்க்காலம்

சன்னல் தக்கையில்
சிக்கி நிற்கிறது
பெருங் காலம்
திரண்டெழும் ஒவ்வொரு மூச்சும்
முட்டித் திரும்புகிறது

மூடிய விழியில்
நாடித் துடிப்பில்
ஏழு கடல்தாண்டி
ஒளிரும் ஒரு துளிச் சுடரில்
ஊழி நிகழ்ந்தது
இலைகள் தடவிவிட
மென்காற்றும் இல்லை

சுவடழித்து அணைப்புகளை
மீட்டுச் செல்லக்
காத்திருப்பவனிடம்
பாடச் சொல்லிக்
கேட்பதும் நியாயமில்லை.

புரிதலும் பிரிதலுமாய்
தரையெங்கும் சிதறிய தழும்புகளை
எண்ணுவதா?
ஆடைகள் போர்த்திருக்கும்
நட்சத்திரங்களை எண்ணுவதா?

மிகுந்த வேதனையும்
பேரமைதியும்
இணையும் நடுக்கோட்டில்
பதிகிறது முத்தம்.

♦

சாசனம்

இன்னும் ஒரு
பத்துக் காசுக்காகக் கழிவறை வாசலில்
அந்தக் கிழவி மேற்கொண்டுள்ள தவத்திலும்
கோப்பியும் சோறும் வாங்கும்
அந்தப் பொழுதின் அவளது ஆசையிலும்
சிறிதும் பொய்யற்று
நிமிர்ந்து நிற்கின்றன என் நியாயங்கள்

எனது பரிதவிப்பும்
கையறுநிலையும் உங்களுக்குப்
பேரின்பம் ஊட்டும்போது
உங்களது அங்கீகாரங்களுக்கு
வேலை இருக்கிறதென்று
காத்திருக்காதீர்கள்
பாதுகாப்புகள் தேவையற்றதென
நான் உணர்ந்து வெகுகாலம்
ஆகிவிட்டது

பூனைக்குட்டியாக்கி
உங்கள் சாய்மனைக்கு அடியில்
ஒளித்தபோதும்
அரவணைக்கும் வார்த்தைகளால்
மதுக் கிண்ணத்தில்
கரைத்தபோதும்
பாறை முட்டி எழும்
கள்ளிச் செடியாய்
துளிர் விட்ட நான்
இரவுகளைப் பேரம் பேசிக்கொண்டிருக்கும்
உங்களது தவிப்புகளில்
மறுக்க முடியாது
இறுகியுள்ளேன்.

உங்களது நியாயங்களுக்குள்
இனியும் என்னைப் புதைக்க முடியாது
என் எண்ணங்களின் ஆழத்தில் இருந்து
மீண்டெழுந்துள்ளேன் நான்.

♦

மொழிபெயரும் புலத்தில்

மடிந்துபோன பொழுதுகளில்
ஒட்டிக் கொண்டிருந்த பரிதவிப்பும்
எழுதி முடித்த கவிதையாக
தொடர்பே இல்லாது விலகும்போது
அடுத்தவேளை சாப்பாட்டை நான்
தேடுவது
உயிரோடு இருப்பதற்கு மட்டுமல்ல

எனது பாடல்கள்
மொழிச் சலவைக்கு உள்ளாக்கப்படுகையில்
நெற்றிப் பொட்டில் என்னைப்
பொத்தி வைப்பது என்பது
பழுதடைந்த துப்பாக்கியின்
பாதுகாப்பாகவே இருக்கும்

நிறங்களால் ஆன பகலில்
கரைந்து போன என்னிடம்
குழந்தைகளுக்கு இரவில் சொல்ல
ஒரு கதைகூட எஞ்சவில்லை
ஆனாலும் தலைமுடியின்
நிறம் மாற்றி அலையும்
அவர்களது நம்பிக்கையை
மறுதலிக்க வேண்டிய
கட்டாயம் எனக்கு இருக்கிறது

எனது இருத்தலை
இந்தச் சேலைக்குள் சுற்றி
வைத்துவிட முடியாது என்பதை
மௌனம் கலைந்த
இந்த இரவு உறுதியாக்குகிறது

இறங்கு தளம் இல்லாமலே
தொடர்கிறது பயணம்
வழியெங்கும் வாழைமரம் நடுவதில்
நிறைவு கொள்கின்றனர்
அனைவரும்

அடுத்த நிறுத்தத்தையும்
நழுவ விடுகிறேன் நான்
வாழ்வைத் தொடர்வதற்கல்ல
என்பதை மட்டும்
இப்போது என்னால் சொல்ல முடியும்.

♦

வெளி

மழை பெய்கிறது
மண் வாசம் வெளி நிரப்புகிறது
இலை உதிர்த்த மரங்கள்
குளிர்போர்த்தத் தளிர் விடுகின்றன
பறவைகள் கூட்டுக்குள் முயங்க
சுவர்களில் எறும்புகள்

நிலவும் நட்சத்திரங்களும் வானில் இல்லை
கொடிப் பூக்கள் மணக்கின்றன தாழ்வாரத்தில்

காலை விளக்குமாறுக்குத் தப்பிய
காய்ந்த குச்சிகளில் குடைக்காளான்கள்
கூட்டம் போடுகின்றன

கப்பல் இல்லாமல் குப்பை இல்லாமல்
சுழன்றோடும் கால்வாயில்
குதித்தோடுகிறது
நாட்டுப் பற்றோடு ஒருவன்
வீசியெறிந்த 'கொக்கோ கோலா'.

கட்டடங்கள், உணவு மையங்கள்
கார்ப் பேட்டைகள்,
புல் தரைகள் இவைதான்.

இவை மட்டும் இல்லை.

வெளியே மழை
சன்னல் திரையையேனும்
கொஞ்சம் விலக்கு
விழும் விரல்களை எண்ணுவதை விட்டு.

♦

பாடம்

வானத்தில்
பறந்துகொண்டிருந்த
பட்டங்களுக்குள்
ஒரு போட்டி,
விழுவது யாரென்று.

தற்செயலாய்
ஒரு பட்டம் வாலறுந்து
விழுந்தபோது
பறப்பது பற்றித்
தெரிந்துகொண்டது.

♦

ஒரு வீட்டின் சோகம்

உன் திருமணத்தில்
உன் அம்மாவுக்கும் அப்பாவுக்குமுள்ள
மகிழ்ச்சியும் வருத்தமும் எனக்குமுண்டு.
உன் புதுவாழ்வில் நான் பூரிக்கிறேன்
என்னில் இருந்து நீ மெல்ல விலகும்
சொல்லவொண்ணாக் கலக்கத்தோடு.

இதுநாள் வரை என்னிடம் வளர்ந்த நீ
நாளை விடிந்ததும் அன்னியமாகி விடுவாய்.
சாமி அறைக்குள் இனி உன்
கால்கள் தானாக நடக்கா.

இருட்டிலும் எடுக்கக்கூடிய உப்பும் சீனியும்
எங்கிருக்கிறது என்று இனித் தேடுவாய்.
சுகமாய் சாய்ந்து நெட்டி முறிக்கும் சோபாவில்
பட்டும் படாமலும்தான்
அமருவாய்.

உன் உள்ளாடைகள் இங்கின்னும்
தொங்கிக்கொண்டிருந்தாலும்
'என் அறை' எனக் கொண்டாடமாட்டாய்.

கண்ணீர் வடித்து நீ
கோபமாய்ச் சுருண்டிருந்த
கதவு மூலை
நினைவுச் சின்னமாக மட்டுமே.

எப்போதாவது தன்னிரக்கம் ஏற்பட்டால்
எப்போதும் நீ சாய்ந்துகொள்ளும்
இந்த நிலைப்படியைத் தேடி வருவாய்.
கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டே
நின்றுவிட்டுப் போவாய்.

இன்று நீ
வலது கால் எடுத்து வைக்கும்போது
என்னையும் அடியில் புதைத்து விடாதே.

♦

இலை வீழ்ச்சி

இலை மண்ணில் விழுந்தது.

புவியீர்ப்புச் சக்தி

காற்று தெற்கில் வீசுகிறது

இலையுதிர் காலம்

நிலையில்லாத உலகின் சாட்சியம்

எல்லாம் இறுதியில் மண்ணுக்கே

மரம் சொட்டிய ராட்சதக் கண்ணீர்

காற்றசைவின் குறிப்பு

காலச் சுழற்சியில் கழன்று விலகும் உறவுகள்

உயிரிழந்த உறுப்புகளை வலியில்லாமல்
நீக்கிவிடும் இயற்கையின் அற்புதம்

குறுக்கே விழுந்த அபசகுனம்

அடடா . . . இலை ஒன்று விழுந்து விட்டது . . !

காற்று மீண்டும் வீச மரம் கிளை அசைத்தது

மீண்டுமோர் இலை விழத் தொடங்கியது

சருகாய் எழ.

♦

மேய்ப்பன்

அவர் பின்னே எல்லாரும்
நடந்தோம்.
அவர் மேய்ப்பராக
நாமெல்லாம்
ஆட்டு மந்தைகளாக.

ஒருநாள் ஒருவன்
ஏன் நடக்க வேண்டும்
என்று சிந்தித்தான்.
எல்லாரும் சத்தம் போட்டார்கள்
சிந்தனையைக் கலைத்துவிட்டு
கூட்டத்தோடு இணைந்தான்.
நீண்ட நாள் கழித்து
அவன் மகன் கேட்டான்
ஏன் நாங்கள் நடந்துகொண்டே இருக்கிறோம்?

அவன் நின்றான்

பெருநடை தடைப்பட்டது.
எல்லாரும் சத்தம் போட்டார்கள்.
நடப்பதை நிறுத்திவிட்டு
அவன்மேல்
கல்லெறிந்தார்கள்

தன் கையிலும் கல் இருப்பது கண்டு
மேய்ப்பர் திகைத்தார்

கல் சிரித்தது

இது நல்ல வாத்துக்கூட்டம்.

♦

உலரும் இரவு

விரல்களை மெல்லப் பற்றி
செவிகளில் மென்மையாய்
படர விடத்தான் நினைத்தேன்

முழுமையும் ஒருமையும் கொண்ட
அதை ஒரு பூவிலோ
அல்லது என் சொல்லிலோ
அடக்கி விடக்கூடியதாய் இல்லை.

உயிரற்ற பாடலில் இது
அறுபட்டுப் போகிறது
சுயமிழந்து குலைகிறது

இதழ்களை உன் நுதலில்
ஆழப் பதிக்கவும் ஆகவில்லை.

உண்மையும் அதன் எதிர்மறையும்
உண்மையாய் இருக்கும் இது ஏதோ
ஒன்றைச் சார்ந்துவிடும்
ஒன்றாய் இல்லை.

முரண்களில் பொருது நில்லாதது
ஒரு பொறிக்குள் அடங்காதது
விழிக்குள் வழிந்து விடுமா?
என்னில் இருந்து வெளிவருமா?

உன்னெங்கும் சுடராய்
விசிறும் இதை எப்படி நான்
உன்னிடம் காட்டிக் கொடுப்பது?

♦

மென்மை

ஆடை களைந்தாய் என்றா
வாளைத் தூக்கச் செய்தேன்?

தாயக்கட்டையில்
சாயம் போனபின்
சுற்றி இருக்கும் சேலையிலா
தொக்கி நிற்கும் என் கற்பு?

தொடையில் அமரச் சொல்லி
நீ ஆதிக்கம் காட்டலாம்
கூந்தல் அவிழ்த்து விட்டு
நான் துவேஷம் தணிக்க மாட்டேன்

தோள்களில் தொலைத்த பலம் காட்ட
பூக்களின் இதழ் தேடி நீ வரலாம்
உன் தோள் முறிக்க என் விரல் போதும்
குழல் ஊதும் இறைவனைக்
கூப்பிட மாட்டேன்

கொக்கரிப்புகளில் கும்பல் சேர்க்கும்
கோழி அல்ல;
சத்தமின்றிக் கொத்தித் தின்னும் கழுகு நான்

எல்லா வாள்களையும்
ஒன்றாய்ப் புதைக்கவே
சும்மா ஒரு சபதம்.

♦

தடை

எங்கும் சுதந்திரம் கெக்கலிக்க
இடை நிலைக்கு மேலும் கீழும்
எதற்கும் அனுமதி.

முடிந்தால் எழுவோம்
முன்னால் மண்டியிட்டவன்
தளர்ந்தால் சுடுவோம்.
குறியில் குருவியும் எதிரியும் ஒன்று

குருதியில் உறுதி பார்க்கும்
கொடிக் கம்பங்கள்
கொடியில்
பிறையாய் நட்சத்திரங்களாய்
ஜனநாயகத் தூவல்கள்

கழிந்த காலத்தின்
கரகோஷங்களைக் காப்பாற்ற
கவிதைகளை மட்டும்
தடை செய்கிறோம்
இது உட்பட.

♦

கணக்கு

எனக்குத் தெரிந்த நாளாய்
ஐப்பசி அமாவாசையில் தீபாவளி
அதற்கு முன் மாரியம்மன் கோயில் தீமிதி
அக்டோபர் கடைசியில் இறுதித் தேர்வு வரும்.

அப்பா அடி அளந்து தீமிதிப்பார்
அம்மா ஒன்பது சுற்றுச் சுற்றி நூற்றியெட்டு
கும்பிடுதண்டம் போடுவார்
வீட்டில் எல்லாரும் விரதம்
பாட்டி மூன்று நேரமும் சைவமாய்
விருந்து சமைப்பார்
தீக்குழி மூடியதும் அப்பா ஏழுநாள் விரதம் முடிப்பார்

திரௌபதி திருவிழா முடிந்து
கொடி இறங்கிய பின்தான்
அம்மாவின் இருபத்தொரு நாள் விரதம் முடியும்
முட்டை உடைத்து 'குவே டார்ட்'
செய்யத் தொடங்குவார்.
எண்ணெய்ச் சட்டி வைப்பார் பாட்டி
எண்ணி எண்ணி டப்பாவில்
பலகாரங்களை நான் அடுக்குவேன்.
வீடு கழுவத் தொடங்குவார்கள்
ஜன்னல் திரைகளை நான்
அளந்து மாட்டுவேன்.
இடையிலே தீபாவளி 'ஷாப்பிங்'
சாமான் பட்டியல் போடுவது நான்தான்.
இருபத்தொரு வகை பதார்த்தங்களோடு
இறந்து போனவர்களுக்கு
மூன்றுநாள் முன்னாடி சாமி கும்பிடுவோம்.

தீபாவளி வந்தால்
தூக்கம் போய்விடும்
'டிவி' நிகழ்ச்சிகளைப் பதிவு செய்வது
என் பொறுப்பு.
விழுந்து விழுந்து விருந்து படைத்து
இரண்டு நாளாவது விடுப்பு எல்லாருக்கும்.

நான் தவறாமல் தேர்வுக்குப் போவேன்.
கணக்குப் பாடத்தில் விட்ட கோட்டை
பூக்குழியில் இறங்கும் முன்
அப்பா கையில் விழுந்த தீமிதிச் சாட்டையாய்
என் முதுகில் கனக்கும்.

♦

காத்திரு

சந்தியில் நிறுத்திவைக்கப்பட்டு
கல்லால் அடித்துக்
கொல்லப்படும் பொழுதும்

உருக்குலைந்த உணர்வுகள்
மயிர்க்கால்களில் வழிந்து மண்ணில்
குருதியாய் படியும் நேரத்திலும்

உனக்குள் கனலும் எரிமலைக் குழம்பில்
உன் அறிவு அமுக்கப்பட்டு
சாம்பலாய்ப் பூக்கும் தருணத்திலும்

ஒளிமிகும் உன் கண்களைப் பிடுங்கி
கரித்தூள் நிரப்பும் வேளையிலும்

நீ மடிந்து போவாயே ஒழிய
குழைந்து போக மாட்டாய் என்பதறிவேன்
இருந்தாலும்

வார்த்தைகள் சிலவேளை வாட்டி விடலாம்
நீண்ட நடை சோர்ந்து விடலாம்
வெற்று வார்த்தைகளில் இல்லை வாழ்க்கை
என்றாலும்

உயிரெரித்து நீ வளர்க்கும் யாகத் தீயில்
ஊழிக் காலமும் ஒருநாள் உதிரும்
அதுவரையில்
காத்திரு.

காத்திருப்பதில் நட்டமெதுவும்
பெரிதாய் இல்லை
உயிர் வாழ்வதைத் தவிர.

♦

என்னாலா மைக்?

உங்கப்பன் யாரோ
எங்கப்பன் யாரோ
யாருலா கண்டா?
நாம கூட்டாளிங்க
பீர் குடித்து
ஜாலியா இருப்போம்
வா லா மைக்
எடுத்துக்கோ 'எக்ஸ்டசி'
சும்மா
என்ஜாய் பண்ணுலா.

உங்கப்பன் யாரோ
எங்கப்பன் யாரோ
நாம மக்கள்ஸ்லா
நமக்குள்ளாற என்னாலா?
எவன்டா முறைச்சான்
காட்ரா
சொருவிடலாம்

உங்கப்பன் யாரோ
எங்கப்பன் யாரோ
யாருக்குலா தெரியும்?
இது உன் 'பசாலுலா'
நமக்கொன்னும் தெரியாது
குத்தினது யாருன்னு
கேட்டான்
சொல்லிட்டேன்லா
தமுளன்லா!

♦

கா... கா... கா...

காலையிலிருந்து கரைகிறது காகம்.
சனிக்கிழமை மட்டும் எள்ளுச் சாதம்
தின்ன வருவது
இன்று வந்தபோதே தெரிந்து விட்டது.

அதன் தொடர் கரைதலால்
அத்தையின் சாவு பற்றியும்
ஐநூறு வெள்ளிக்கு வாங்கிய 'டோட்டோ' பற்றியும்
பக்கத்து வீட்டுச் சீனனுக்கு
ஏற்பட்ட கலக்கத்தைவிட,
எனக்கு மகிழ்ச்சி அதிகம்.

வரும் வழியில் பார்த்திருப்பீர்களே
இடம், மரம், கொடிகள் பேதமின்றி
எங்கெங்கும் வியாபித்திருக்கும்
இந்தக் காக்கைகளை?

இவைகளின் நாட்டுரிமை தெரியாது
ஆனால் உங்கள் கதைகளின்
ஏமாந்த காக்கைகளோ
ஏய்க்கும் காக்கைகளோ இல்லை இவை.

முக்கியமான விஷயம்,
இந்தியாவில் இருந்து வந்திருப்பதாக
பக்கத்து வீட்டுச் சீனனிடம் மறந்தும்
சொல்லி விடாதீர்கள்.
எல்லாக் கருங்காக்கைகளும்
அங்கிருந்துதான் வந்தன
என்ற கோபத்தில் இருக்கிறான்.
மஞ்சள் சாயம் பூசிக் கொள்ளும்
காக்கைகளை மட்டுமே அவனுக்குப் பிடிக்கும்.

எனக்கும்தான் கோபம் வரும்
தெருவைக் கடக்கையில்
தலையில் எச்சமிடும் காக்கைகளிடத்தில் அல்ல
கறுப்பை இழந்துவிட்ட என் முடியின் மேல்.

♦

மீ கோரிங்கும் வீவக வீடும்

‘ஓலெவல்’ முடித்து விட்டேன்.
ஏதோ ஓர் அலுவலகத்தில்
வேலை நிச்சயம்.

இரண்டு வெள்ளி வீசினால்
சுடச் சுட மீ கோரிங்
தொட்டுக்கொள்ள
இப்ப ‘சன் டீவி’யும் இருக்கு.

போனஸில் வாங்கும்
‘டிசைனர்’ சுடிதார்,
கம்மல், பதக்க மாலைக்கு
கல்யாணமும் கலைநிகழ்ச்சியும்
வருஷம் தவறாமல் நடக்கும்.

பண்டிகைகள் கொண்டாட
சமூக நிலையங்கள்.
காசு கொடுத்தால் தேடி வரும்
இலக்கியமும் கலைகளும்.

பொருளியல் மந்தத்தைக்
கோப்பியோடு கொறித்துக்கொள்ளலாம்.
எனக்கும் உண்டு மூவறை வீவக வீடு.

‘நாலு நம்பர் லாட்டரி’ இருக்க
சிவப்பு அடையாள கார்டுக்கு
என்ன கவலை?
யாராவது எம்.பி. கதவைத் தட்டினால்
எப்போதும் என் ஓட்டு உங்களுக்கே
என்று பல்லிளிக்கும் எதிர்காலம்.

♦

ஒழுக்கு

நலம் விசாரிக்கும் நட்பு
இல்லை எனது. நேரமிருந்தால்
நினைத்துக் கொள்வேன்
ஒருநாளில் இருபது முறையாகவோ
இரண்டு வருடங்களில்
ஒரு நிமிடமாகவோ இருக்கும்.
இருந்தாலும்
சலிப்பின்றி உபசாரங்களின்றி
எப்போதும் உள்ளே அழைக்கிறாய்

உனக்கென்று வாங்கிவர
எனக்கென்றுமே தோன்றியதில்லை
உன்னை அழைத்து ஒருபோதும்
நான் சூடம் காட்டியதில்லை.
எனக்குப் பிடித்த பொங்கல் செய்து
உனக்கு நான் தந்ததில்லை.
வாசனைக்காய் வாங்கிவரும் மல்லிகையை
மாட்டி வைக்க மட்டுமுன்
தோள் தேடுவேன்.

சிறுவயதின் ஒழுகும் மூக்கை மறைக்குமென்
நாட்குறிப்பின் இடையிடையேயுள்ள
வெறுமை நிரம்ப
அல்லதென் சமதர்மத்தின்
பெருமை சாற்ற உன்னைப் பற்றிச்
சிறிது எழுதுவேன்.

உன் இருத்தல் நிச்சயமில்லாதபடியால்
எதையும் நான் மறைத்ததில்லை.
எப்படி நான் இருந்தாலும்
நீ மட்டும் அப்படியே.
எனக்குத் தெரிந்த எல்லா நூற்றாண்டுகளிலும்.

♦

சப்பாத்துகள்

கண்ணாடியின் மென்மையும்
பனியின் இறுக்கமுமாய்
காலில் மாட்டியதும்
காற்றின் குமிழிகளில் மிதக்க வைத்தது

முந்நூறு வெள்ளி மதிப்பில்
ஒவ்வொரு மிதிப்பும்
எம்பித் துள்ளியது.

ரப்பரும் தோலும் குழைத்துச்
சமைத்த வெண்நுரையில்
பாத ரட்சைகள் லேசர் இழைக்கு வந்தவரை
காலணி காலத்தின் சுயசரிதை.

விளம்பர வண்ணங்கள் கண்களில் திரையிட
சூம்பிய கால்கள் நீண்டு நிமிர்ந்தன
எந்தக் குழந்தைக்கும் வரும் கனவுதான்.

புதுச் சப்பாத்தில் பறந்தபடி
தரை பார்த்த போது
உலகமயமாக்கலின் ஒப்பற்ற புழுதியில்
எல்லாக் குழந்தைகளின்
கால்களும் ஒரே நிறத்தில்.

இருப்பினும்
இத்தாலியத் தோலும்
அமெரிக்க வடிவமைப்பும்
ஒவ்வொரு காலிலும்
ஒவ்வொரு விலை

எல்லாக் கால்களிலும்
நடப்பு மறந்த சப்பாத்துகள்
காலுறைகளின் மதிப்பைக்
கணக்கிட்டபடி.

♦

என் வெளி

சுவைத்த மதுவிலும்
சொச்சமுள்ள பொழுதிலும்
உறவு பின்னப்படுகிறது.

மெல்லத் தளரும் உன் மணிக்கட்டுக் கயிறு
அவிழ்த்து விடும் மூச்சில்
பாதையோரத்து
காட்டுமல்லி மொட்டவிழ்கிறது.
மின்னி மினுக்குகின்றன வண்ண விளக்குகள்

இடையிருக்கும் மேசையில்
தனித்திருக்கும் உன் கைக்கடிகாரம்
டிக் டிக்த்தபடி எட்டிச் செல்ல
இறுகும் விரல்கள்.

உனது ஒரு காலடிக்கும்
மறு காலடிக்கும்
இடைப்பட்ட தூரத்தில்
உறைபனி எரியும்.

என் அருமை ஆணே!
வாழ்க்கையெழுத
நினைவுகள் மட்டுமே
எனக்கென்று எண்ணி விட்டாயே

நுண்ணோக்கி தீண்டா
விண்கோள் நான்.
இன்றைப் பகலோடு
எரிந்து வீழுமொரு
எரிகல் நீ எனக்கு

பால்வீதியின் நீள்வட்டங்கள்
சுருக்குப் பைகளல்ல
அதில் இறுகிப் போகுமோர்
அனுபவமல்ல என் பாதை.

♦

காலத்தின் கையில் காலம்

டாவ் ஜோன்ஸ் புள்ளிகள் இறங்குகின்றன
அதிகாரங்கள் கவிழ்ந்து விழுகின்றன
பூமி மூட காத்திருக்கின்றன
வானமெங்கும் கருமேகமாய்
வலுவிழந்த பண மூட்டைகள்.

இடம் பெயர முடியாமல்
சாவிகளைப்
பத்திரமாகத் தொலைத்து விட்டு
இருந்தபடியே ஓடுகின்றன நதிகள்

காய்ந்த காம்புகளின் உயிர்க் கசிவில்
ஈரம் தேடி எலும்பு நெருடி
காலச் சுழற்சிக்காக
ஈக்களோடு காத்திருக்கின்றன மலர்கள்

உயிரோடு புதைந்த வேதங்களின்
உயிர்ப்புக்காய்
ஒவ்வொரு முளையாய்
உயிர் கொடுத்து அனுப்புகின்றன நிலங்கள்

இன்றைய இரவின் நிச்சயத்தில்
நாளைய விடியலை ஏற்றிவைக்க
எனக்குள் வாழும் இன்னொரு மனிதம்
எரியும் காற்றை
படம் எடுத்துக்கொண்டிருக்கிறது
கருகிய கபாலத்தில் காலூன்றி.

♦

மீள் சுழற்சி

சத்தமின்றிப் பின்கழுத்தில்
முட்டை விட்டு வந்தமரும்
நிறமேறா இறகொன்று.

கதுப்புகளில் கனம் கூடும்
மார்புகளில் வலி பூக்கும்
மெல்லப் பெருத்த உடல்
முகமெங்கும் கொப்புளிக்கும்.
கீறலாய்ச் சினம்
நாளங்களில் நீலம் தீட்டும்.

கடக ரேகை விட்டு வந்த
உயிர்க்கோடு,
மத்திய கோட்டில்
மண்டியிட,
பெருமழை அழலாய்
மேனியெங்கும் முளைவிடும்
வானவில் இரவு

விருப்பாய் விடிந்த
வெறுப்பின் இனிமை
உந்திச் சுழியில்
விரிந்து விரிந்து
உலகமெங்கும் படியும்

தீண்டல் தேடும் கணங்கள்
நீர்ச்சுழியாய் ஆழப் புதைய
எங்கும் வண்ணம்
எங்கும் சிவப்பு

இருப்பு மறுப்பு
பிறப்பு மரிப்பு
கடந்து கடந்து
புதிய உயிர்ப்பு

மேனியெங்கும்
பட்டாய்ப் படரும்

வாசல் தாண்டி வீசும் புது வாசம்
காலம் மறந்த நேரம்
உன் சுவாசம் தேடும்

மீண்டும் பயணம்
மகர ரேகையிலிருந்து
மத்திய ரேகைக்கு

கழுத்து விட்டகன்று
செஞ்சிறகு பறக்கும்

23 பாகையில்
அங்கிருந்து ஒருமுறை
இங்கிருந்து மறுமுறை
வெப்ப மண்டல வாசம்வரை
மாத்திரை தப்பாது
தொடரும் யாத்திரை.

♦

தொடரும்

எங்கிருக்கிறாய் நீ?
என்ன ஆனான் உன்னோடு வந்தவன்?

சிறைச்சாலை அல்லது
மறுவாழ்வு இல்லம்.
எழுதப்பட்டு விட்டதா நம் வாழ்க்கை?

கறுப்புடையும் காதுவளையமுமாய்
நெஞ்சு நிமிர்த்தி உலா வந்தாய்.
தோள் இடித்து முறைத்த
முதல் சந்திப்பும்
வர்த்தக மையத்தின்
அலங்காரப் படிச்சுவரின் கீழ்
கருகிய குருதியில்
செதுக்கிய முதல் வெற்றியும்
அழிக்கப்படாமல் உள்ளன.

தைப்பூசக் காவடிக்கு
ஆடிய போதையில் நீ.
படையோடு அவர்கள்.
வாள் பழகாத வீரம்
“மறத்தமிழன்” மரபு
பக்குவம் தெரியாமல் குத்த
அறுபடாத நரம்புகளால்
அவதியுற்றுச் செத்தான்
தெருவில் போனவன்.

உரத்த குரலும்
கூரிய கருவிகளும்
எத்தனை தூரம்?

கூண்டோடு அள்ளிப்போய்
கொட்டி விட்டார்கள்.
கோலிக்குண்டுகளாய்
சிதறிப் போனோம்.
பண்புகள் வேறாய்
நண்பர்கள் வேறாய்
திசைகள் மாறிப் பிரிந்தோம்.

குளிர் அறையில்
விருதுகள் உறைய
புள்ளிவிவரக் கணக்கெடுத்துக்
கொண்டிருந்த நான்,
ஒரு விடியலின் பேரமைதி கிழித்து
என் பிள்ளை வெட்டுண்டு வீழ
திடுக்கிட்டு விழித்தேன்

கூரை வேய்ந்த பாதை வழியே
பத்திரமாய் என் பரம்பரை
காணாமல் போய்க்கொண்டிருக்கிறது.

♦

ஆற்றுப் பாடல்

கரையில்
உணர்வுகள் காய வைத்து
நீராட வந்தாய்

நானும்

அம்மாவின் கண்ணீரில்
நீ
அப்பாவின் கண்டிப்பில்
நான்
எதிர்மறைக் கட்டளைகளில்
பாலம்

எல்லைக் கோட்டைத்
தள்ளிக்கொண்டே நடந்தாய்.
நானும்.
நடுக்கோட்டில் விழி தொட்டாய்.
நானும்.

இறுகி நின்றது பாலம்

காலங்கள் கடந்து
கனவுகள் தாண்டி
உன் நிழலின்
அணைப்பில் நான்.
காதுகளின் காவலில் நீ.
ஊர் வம்பளந்தபடி காற்று.

எங்கோ தப்பாய்
அலறிப் பறந்ததொரு துப்பாக்கி.
என் உயிர் கிழித்துப் போட்டாய் நீ
நீரில் சிவந்ததென் அன்பு

கரைகளில் காவலாய்
பாலம்
உன்னைத் தேடி
என்னைத் தேடி
நீரிலாடி
நீரிலாடி

♦

சாத்தானின் வேதம்

இந்த முக்காட்டின்மீது
கோபப்பட எவருக்கும் தகுதியில்லை
அது கழற்றப்பட்டது என்ற காரணத்தால்

சமைந்துபோன கல்லில் இருந்து
பிரிந்து வந்திருக்கிறது இந்த முக்காடு
கல்லை மூடுவது தேவையற்றதென்று
அது நினைத்திருக்கலாம்

இப்போது அது கழன்ற சிறகு

எண்ணற்ற முகங்களை
ஒன்றாய் மூட அது விரும்பவில்லை

மூட்டை மூட்டையாய்
கணக்கற்ற காலமாய்
மௌனங்களைச் சுமக்கும் அதன்
கனம் பற்றி யோசிக்கத் துணிவற்றவர்கள்
காரணங்களை அதனிடம் யாசிக்க முடியாது

முடிந்தால் அதனிடம் ஓதுங்கள்
பணிவாய் இருப்பதையும்
பன்றிகளுக்குப் பணிவிடை செய்யும்
முறைகளையும்

அது தொடங்கியிருப்பது
தனி ஆவர்த்தனமல்ல
என்பதைப் புரிந்துகொண்டு

♦

இன்னும் மனிதம் உயிர்த்திருக்க

ஓய்ந்துபோன மழையின்
தேங்கி நிற்கும் சில
இலை நீர்த் துளிகள்

புல்வெட்டி மிஷினுக்குத் தப்பி
கண்சிமிட்டி நிற்கும் ஒரு
பொன்னாங்கண்ணி

பதினேழாம் மாடிச் சாடியில்
ஒற்றை மொட்டைச்
சுற்றி வரும் வண்ணத்தி

தவறும் போதெல்லாம் லேசாய்
பயமுறுத்தும்
பாட்டி சொன்ன
நரகலோகத் தண்டனைகள்

துக்கமான இரவிலும்
சிரிக்க வைக்கும்
சிறுவயதுத் தவறுகள்
பயங்கள் குட்டிச் சண்டைகள்

இப்படி ஒரு சின்னப் பட்டியல்.

♦

மூலை

இதோ
இந்த மூலையில்தான்
உலகம் தொடங்குகிறது.

விதவிதமான வாசனையோடும்
சுவைகளோடும்
உயிர் வளர்க்கும்
உணவுகள் தயாராகின்றன.

அனுபவச் சோறுண்டு
ஆண்கள், பெண்கள் என
குழந்தைகள் வளர்கிறார்கள்.

வழமைகள் பதியப்படுகின்றன
உறவுகள் உறுதி பெறுகின்றன
கனவுகளுக்குச் சிறகு முளைக்கிறது
கற்பனைகளுக்குக் காது வளர்கிறது.

உலகின் அத்தனை சந்தோஷங்களையும்
இந்த மூலை சுகித்திருக்கிறது
சோகங்களைச் சுமப்பதுபோல.

பல்லிகளின் உச்சுக் கொட்டலோடு
கிசுகிசுப்புகளும் ரகசியங்களும் பல்கிப் பெருகும்
இனிப்புகள் காரத்தோடு
திருமணங்கள் நிச்சயமாகும்
மணவிலக்குகள் முடிவாகும்
முதலுணவு முதல் வாய்க்கரிசி வரை
எல்லாம் இங்குதான்

அழுகையும் ஆத்திரமும்
காதலும் கனிவும்
குழைத்துக் குழைத்துச்
சமைந்திருக்கும் இந்தச் சின்னமூலை

மழையில் கதகதப்பாய்
வெயிலில் நிழலாய்
பயந்த வேளையில் பதுங்கு குழியாய்
வீறு கொண்டால் யுத்த பூமியாய்த்
தேவைக்கேற்ப தன்னை மாற்றிக்கொள்ளும்

காற்றும் ஒளியும் மட்டும் இங்கு ஏனோ
தாராளமாய் புழங்குவதில்லை
எப்போதும்
ஆகச் சிறிய ஜன்னல்கள் மட்டுமே உள்ள
இங்குதான்
உலக வாசல் திறக்கிறது

வீட்டின் கடைக்கோடியில்
கண்படாத தூரத்தில்
ஒதுக்கப்பட்ட இடமாய்
ஒதுங்கி நிற்கும்
இந்த அக்கினி மூலையில்தான்
பிரளயம் குமிழியாய்க் கொப்பளிக்கும்
பொங்கிப் பிரவாகிக்கும்
ஆழிகள் சீறி உலகை அமிழ்த்தும்
எல்லாம் முடிந்து
பின்

ஓரணு உயிரி
மெல்ல உயிர்த்து வரும்
இதுபோல் கவிதை எழுதிக் கிழிக்க

♦

மில்லேனியக் கனம்

கணக்கிட முடியாத
என்றோ ஒருநாளில்
தொலைந்துபோன
கனத்தைத் தேடி வலம் வருகிறேன்
மாலைகளையும் பாடல்களையும்
தட்டுகளில் சுமந்து
மேடை மேடையாக

நீ இழுத்து விட்ட
நாற்காலியில் அமர்ந்து
நீ வாங்கி வந்த
எரி திராவகத்தைச் சுவைத்தபடி
பாடிக் கொண்டிருக்கிறேன்
என் கனபரிமாணம்பற்றி

ஒரு நிமிஷம்,
என் மொழியில்
உன்னால் பாட முடியாது
என்பதை எப்போதும்
நீ மறந்தே விடுகிறாய்
எனக்குமான உலகில்
என்னை நீ துறப்பதான
கற்பனைகள் போல்

ஒருவேளை
உன் தோட்டத்துச் சொற்களில்
என் கனம் ஒளிந்திருக்கலாம்
அதனால்தானோ என்னவோ
உன்னால் மட்டும்
சதையும் ரத்தமும் உள்ள கடவுளாக முடிகிறது
கடவுளாகியும் நான்
கல்லாகவே இருக்கிறேன்

பார்,
பாட்டு சுகத்தில்
அமிலம் ஆறிப்போனதை
அவதானிக்கவில்லை நான்

இப்படித்தான் இப்படியேதான்
என் கனத்தை
ஏதோ ஒரு கணத்தில் விட்டுவிட்டேன்
தூக்குப்போடவும் மருந்து குடிக்கவும்
குதித்துச் சிதறவும்

அப்போது உன் கவிதைக்கு
வலித்திருக்கும்
ஆனால்
என் அறிதல்களை நான்
எனதாக்கிக் கொள்வதில்லை

பரவாயில்லை
தேவபாஷை உனக்கு மட்டுமே புரியட்டும்
மேசை விரிப்பு ஒலிபெருக்கி
விளக்குகள் பூந்தொட்டிகளோடு
பரிபாஷைக்காக
எல்லா மேடைகளிலும் நான் இருக்கும்வரை.

♦

காலம் காலமாய்

எரிந்தது
அசோக வனம்
புற்களின் மெல்லிய
தண்டுகளையும் தின்று வளர்ந்தது
தப்பாய் ஆடிய ஒரு வாலில்
தப்பாய்ப் பற்றிய தீ

எரிந்தது காடு எரிந்தது நாடு எரிந்தன மயில்கள்
எரிந்தன கோயில்கள் ஏவல் பெண்கள்
எரிந்தனர் காவல் மரங்கள் கருகின பிஞ்சுப்
பாலர்கள் வெந்து போயினர் நெஞ்சு பிளந்து
அன்னையர் இறந்தனர் ஆண்மை துவள
ஆண்கள் வீழ்ந்தனர்

சண்டைசமாதானம்சண்டைசமாதானம்சண்டை . . .

இராவணன் வலியவன்
இராமன் பெருமைக்குரியவன்
சீதை புனிதப் பெண்

தன்னைப் பற்றி எண்ணவும் பொழுதின்றி
பிள்ளை வளர்ப்பதே கடமையாய் வாழ்ந்த
மண்டோதரியோ மண்ணுமற்று
நீருள் எரிந்தாள்

காக்கப் படைகள் அற்றுப்
போற்றக் கவிஞர் இன்றி
பத்தினிப் பட்டத்துள் சுருட்டப்பட்டு
கருகிப் போனாள்.

அவள் தீயின் எச்சத்தில்
எரிந்து கொண்டிருக்கிறது
அசோகவனம்.

♦

உயிர்ப்பு

என் இனம் பெருக்கவே
உன்னைப் பூத்தேன்
என்று மரபணுக்கள் வண்ணம் பூசி
வாசனை தடவியபோது
நான் இறக்கவில்லை

என்னை மலர்வித்த பனிக்காலை
மாலையில் உன் மரணம்
என்றபோது
நான் இறக்கவில்லை

என் இதழ்களின் ஈரம்
குழந்தையின் இளமைபோல்
களவாடப்பட்ட போதும்
நான் இறக்கவில்லை

உதிர்ந்த கணத்தில்
இலைகளின் கூட்டிலிருந்து
நகர்ந்துபோன நொடியில்
என் நிழலில் இருந்து அந்நியப்பட்டு
உன்னோடு ஒட்டிக்கொண்ட
பொழுதில்தான்
என் இறப்பு நிகழ்ந்தது.

♦

பயங்கரவாதத் தாக்குதல்

ஒரு மூச்சேனும் திரும்பாது
எழுந்து போனாய் நீ
சட்டென முகத்தில்
வந்தடித்தது கூதல்காற்று
ஊசியாய் குத்துகின்றன
சேர்த்துள்ள வார்த்தைகள்

சில மணித்துளிகள் மட்டுமே
முடிவிலியாய் நீண்டிருந்தன.
அலைகளுக்கு இடம் விட்டு
அருகருகே நாமிருந்தோம்
அது வெண்ணிரவு
வெண்கடலின் உப்புக்காற்றில்
விண்மீன்கள் இதழ் விரித்தன

ஒவ்வொன்றாய் எண்ணுவாய் என
எதிர்பார்க்கவில்லை
ஒருதரமேனும் நிறைத்துக்கொள்வாய்
என்றிருந்ததோ மனது?

விடிவெள்ளியின் ஒளிப் பரிமாணத்தை
யாழில் வாசிக்க உனக்கேயாகும்
அலைகளின் இசையில்
கரைய நினைப்பது அபத்தம்தான்

அதனால் என்ன?

துருவும் மக்களும் நிறைந்த படகுகள் மறைவில்
மனங்களை ஒளித்து விட்டோம்

நிறையப் பேசிக்கொள்ளலாம்

அப்படித்தான் அந்திகள் புலர்ந்தன
கடலிறங்கும் படகுகள்

வலைகளில் அமிழும் வரை
நிலவுகள் சேர்த்திருக்கிறோம்
குலுக்கிப் போட்டு
வானத்தின் ஆயுள் கணித்திருக்கிறோம்
அதுவும் அன்று இல்லாதாகிப் போனது

ஒரு பார்வையேனும்
சொல்லாமல் போனாய்
கடல் அலையச் சென்ற நான்
கரை வருவதற்குள்
எதையும் உதறாது
விரைந்து போனாய்

கடலும் காற்றும் நிலவும்
உன்னோடு நடக்கின்றன
பதிந்திருந்த நிலங்களையும்
தூக்கிக்கொண்டு

நீ புதைந்தெழுந்த
மணல்களில்
உன் தடம் இருக்காது
கரையடையும் அலை நுரைகளில்
உன் மணம் வீசாது
உப்புக் காற்றில் நீ
விட்டெறிந்த கோபம் மட்டும் எப்போதும்

கடைசி பஸ்ஸில்
ஏறிப்போவது உனக்கொன்றும்
எழுதி வைக்கும் கவிதையாய் இருக்காது
இதயம் ஒருவேளை நின்று
பின்
இயங்கி இருக்கலாம்

ஒரு சொல்லேனும்
தராமல் போகிறாய்
பிரிந்துபோன விநாடி
யுகங்களாய் நீள்கிறது

ஒரு மூச்சு
ஒரு பார்வை
ஒரு சொல்லில்
இதுவரையிலான
படிமங்களை அழித்துவிடலாம்

எதுவும் இல்லாமல்
போனாய் நீ.

♦

வாழ்தல்

புருவங்கள்மேல் உனது
அன்பு
தடவல்கள்
விழிகளில் தேங்கியிருந்த
கேள்விகளை அமைதிப்படுத்தினேன்
அப்போது
மீண்டும் நம்பினேன்
நம்பிக்கை எனும் மாயையில்
வேதனைகளும் அவநம்பிக்கைகளும்.

♦

ஒற்றைக் கண் அரசியும்
இரட்டைத் தலை அரசியும்

வரங்கள் அள்ளித் தரும்
வனதேவதைகளும்
இறுதியில் சுகவாழ்வு பெறும்
இளவரசிகளும்
நீண்ட நகங்கள் கொண்ட
சூனியக்காரிகளும்
ஒன்றாய் அணு உலையில்
அரைபட்ட ஒரு கணத்தில்
அவர்கள் பிறந்தார்கள்.

காலம், பருவம், குருதி
எல்லாம் வெவ்வேறாய்.

ஹீப்ருக்களின் லிலித்தையும்
வேதங்களின் ஆதிசக்தியையும்
உலகம் மறந்த காலத்தில்
அவர்கள் வளர்ந்தார்கள்.
அவள் கால் வளர
இவள் கை வளர்ந்தது
இவள் கண் வளர
அவள் தலை வளர்ந்தது

பூனையொன்று சூரியனை
விழுங்கி விளையாடிய சமயத்தில்
பூமியை அவர்கள் சூடிக்கொண்டார்கள்.

ஆறுகளைப் பிடுங்கி பின்னலில்
சூடினாள் அவள்.
காடுகளைக் கூறுபோட்டு
எட்டுக்கோடு ஆடினாள் இவள்.
இஷ்டம்போல் இரவையும் பகலையும்
இடம் மாற்றினர்
இடுகாடுகளில் நெல்லும்

வயல்களில் பிணங்களும் விதைத்தனர்.
கடல்களைத் திசை திருப்பினர்
உயிர்களுக்கு நிறம் பூசினர்.

என்றாலும் அவர்களுக்கு
வருத்தம் இருந்தது.
ஒரு கண்ணைத் துறந்தது பற்றியும்
இரட்டைத் தலை வளர்ந்தது பற்றியும்.
அந்தச் சமயங்களில்
நாடுகளின் மன்னர்களை
வீதி கூட்டச் சொல்லி,
மக்களைப் பூமிக்கு வெளியே
அழைத்துப் போவார்கள்
பக்கம் பக்கமாய்க் கண்ணீர்
வடிப்பார்கள்.

பெண்களாய் இருப்பது
அவர்களுக்குப் பிடித்திருந்தது
கண்ணீரின் உரிமையால்.

அழுதழுது ஆழிக்கூத்தாடினர்
கோலி அடித்தனர்
ஒற்றைக் கண்ணில் வெந்நீரும்
இரட்டைத் தலையில் செந்தணலும்
ஒற்றி ஒற்றிக் களைப்பாறினர்

ஆயிரமாயிரம் யுகங்கள் கழிந்தும்
அவர்களின் மகிழ்ச்சி எதுவென்று
படைப்புக் கடவுளுக்கும் தெரியவில்லை
பூமிக்கூரையில் இருந்த பல்லிக்கும் புரியவில்லை.

அரசிகளின் உருக்குலைவுக்கு
பிரம்மனும் பல்லியுமே காரணம்

என்றனர் மக்கள்
கோவில் கதவுகளில் கத்திகள் சொருகவும்
காலி வயிற்றில் காற்றை நிரப்பவும் பழகினர்
கால்களில் நெருப்புக் கொளுத்தி நடந்தனர்

மனைவிகளைத் தின்ற மன்னர்கள்
அரசிகள் பாதம் பணிந்தனர்

முடிவிலியாய் கதை வளர
குழந்தைகள் கேட்டார்கள்,
அரசிகள் மூளையில்
மகிழ்ச்சி பற்றிய குறிப்பைப் பதிய
மறந்த கணினிப் பொறியாளர்
எங்கே என்று.

♦

செப்டம்பர் 11

எங்கள் அடுக்குமாடி
ஒன்றாய் நின்று
கல்விச் சுமை பற்றிப் பேசும்.
கட்டண உயர்வைக் கண்டிக்கும்.
ஆட்சியாளர்களின்
வீட்டுக் கதை ஆராயும்.
ஆண்டு முழுவதும்
பண்டிகை கொண்டாடும்,
பிள்ளைகள் பலகாரம்
எடுத்துச் செல்வர்
பெரியவர் அவர்களுக்கு
திருநாள் காசு தருவர்.

அவசர வாழ்விலும்
எங்கள் காலைகள்
அழகாய் விடியும்.

அப்படித்தான்
செப்டம்பர் பதினொன்றும் விடிந்தது.

ஈரத்துணியின் கனம்
தாங்காத 'காலாக்' கம்பு
ஒடிந்து விழுந்தது.
ஒன்பதாம் மாடி வீட்டின்
மூங்கில் கழி
இரண்டாம் மாடி வரை
சேதம் செய்தது.
பள்ளிச் சீருடை பறிபோனதென
எட்டாவது மாடி,
வேலைச் சீருடைக்குப்
பதில் சொல் என்று
ஐந்தாம் மாடி,

நான்காம் மாடியோ
போலிஸை அழைத்தது

நடுராத்திரியில்
நடுங்கி எழுந்த அடுக்குமாடி
முஹமதின் கம்பு
திட்டமிட்டே விழுந்ததாய்
தனித்தனியாய்க் குசுகுசுத்தது.

அதன் பின் தொடர்ந்த
அத்தனை நிகழ்வும்
மெல்லப் பேசும் ரகசியமானது
அத்தனை பேரும்
பேச்சைக் குறைத்தோம்

மத்தாப்புகூட
ஆள் பார்த்துச் சிரித்தது.

பிள்ளைகள்
வேதம் படிக்கத் தொடங்கினர்.

வேலை இழப்பும்
வருமானக் குறைவும்
எல்லாக் கம்புகளையும்
உள்ளே இழுத்துப் போட்டன.

எங்கள் அடுக்குமாடியில்
காலைப் பொழுது
கவனத்தோடு விடிந்து வருகிறது.

♦

விழாத மழை

நிலவைச் சுற்றி வட்டம்

உன்னைப் போலொரு
மழை வரப்போகிறது

இடியும் குளிர் காற்றும்
இல்லாமல்
உன் கண்களாய்ப் பாய்கிறது
மின்னல்

ஊனுணர்வு தாண்டி
உள்ளே எங்கோ

முகில் தொடாது
வானம் படாது
மூச்சடக்கி முண்டிவரும்
மழையாய்
ஏன் நுழைந்தாய்?

விரல் நுனியெங்கும்
உன் கண்கள்
உயிர்வழி பொழிய

நீயுமற்ற வெளியில்
நானும் உன் கண்களும்

போர் மறந்து
தேடி வந்த திணைகள் துறந்து
ஆழச் சொரிந்த அந்தக் கண்கள்
அணுக்களாய் விரைந்து பெருக

கடல்
கடல் வெடித்தெழும் நிலம்
வானம்
வானம் தெறிக்க வீசும் காற்று

காற்றைத் திரித்து வரும் நீரூற்று
நீருள் பொங்கும் நெருப்பு
எதுவும் இல்லை
எனினும் அனைத்துமாய்

இதோ பொழிகிறது
மீண்டும் மீண்டும்
மீண்டு சுழிக்கிறது
நீண்டு வீழ்ந்து
துள்ளி எழுந்து
மீண்டும் மேலே செல்கிறது
மீண்டு சரிகிறது

காலம் தொலைத்து
களிநடம் புரிகிறது
இலைகளில் பூக்களில்
வேர்களில்

எங்கும் பரவசமாய்
என்றென்றும்
அதே மழையாய்
உன் கண்கள் போலவே.

♦

அக்கினிச் சுவடு

சித்தார்த்தன் விட்டுச் சென்ற
கடைசி மூச்சைப் பிடித்தபடி
நடந்துகொண்டிருக்கிறாள் யசோதரை

அட்சய பாத்திரத்துக்குள்
அடைந்து போன உயிரை
அடிக்கடி வருடியபடி விரல்கள்

சுரண்டப்பட்டு
பிய்க்கப்பட்டு
வீதியெங்கும் விசிறியடிக்கப்பட்ட
அவளின் காதல் பற்றி
அவளுக்குக் கலக்கமில்லை.
அவள் கால்களை
அவள் விடுதலையாகக் கொள்ளவில்லை

இன்னமும்
விலை பேசப்படுகிறது
விரட்டப்படுகிறது
விருந்தாகிறது

வீரம் பேசுவதற்கும்
விட்டுக் கொடுப்பதற்கும்
இவள்தான்
வேண்டியிருக்கிறது
ஆனாலும்
அவள் கருப்பையில் வடியும் உதிரம்
பாலையெங்கும்
சொட்டுச் சொட்டாய் துளிர்க்க
நடக்கிறாள்

அவள் கையிலுள்ள
உயிர்ப் பாத்திரம் தீர்ந்து விடக்கூடாது

என்று பிரார்த்தித்தபடி சைத்தான்களும்
பிறாண்டியபடி தேவதைகளும்
சூத்திரங்களும் உச்சாடனங்களும்
கேள்விகளும் வேள்விகளும்
அவளைத் தொடர்கின்றன

அவளிடம் இருக்கும்
கடைசி மூச்சுக்காகக்
காத்திருக்கிறான் சித்தார்த்தன்
முடிச்சுகளை அவிழ்த்துவிட
மூச்சுடன் பேரம் பேசிக்கொண்டே
மெல்ல நடக்கிறாள் யசோதரை

உருவங்கள் அற்ற உரிமைகள் பற்றி
அட்சய பாத்திரத்தில்
அழுகி ஒழுகும்
அவள் அழகிய கண்களிடம் கேளுங்களேன்.

♦

போர்ட் கேனிங் கோட்டை வாசல்

கோட்டை வாசல்கள் பாதுகாப்பா
அல்லது பலம் காட்டுவதா?
எங்கள் நாட்டின் இடிபாடுகளுடன்
விறைத்து நிற்கும்
இதனிடம் கேட்கலாம்

ஆனால் இதுவோ
எந்த நேரத்திலும் இடிஇடியென
சிரித்து விடக்கூடும்
அல்லது பேயாய் மாறிப் பயமுறுத்தக் கூடும்
அண்மைக் காலமாய் இது
நாடகங்களும் இசைநிகழ்ச்சிகளும் நிறையப்
பார்த்துக்கொண்டிருக்கிறது

உள்ளே திறந்த வெளியில்
தனியாய் நிற்கும் ஒற்றை மரத்தைக் கேட்டால்
'ராபிள்ஸி'ன் தாவரத்தோட்டத்தில்
நாட்டின் எல்லா விதைகளும்
வேர் பிடித்துள்ளன
என்று சொல்லும்

தினமும் வரும் மெதுவோட்டக்காரனோ,
வெள்ளைக்காரன் இடுகாட்டில்
கறுப்புப் பளிங்கில் பளபளக்கும்
'இஷ்கந்தர் ஷா'வின் சமாதியில்,
இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக அது
சேர்த்து வைத்துள்ள
வேண்டுதல்கள் தியானங்கள் வருத்தங்கள்
காதல்மொழிகள் நாலு நம்பர்கள் எல்லாம்
வெளவால்களாய்த் தொங்குகின்றன
என்பான்

உள்ளிருக்கும் பதுங்கு குழிக்கோ
சரணடைதல் மட்டுமே தெரிந்திருக்கக்கூடும்.

காதலர்கள் அல்லது பாம்புகள்
சொல்லலாம்,
மலாய் மன்னர்களின் ஆவிகள்
காலனித்துவ அதிகாரிகளுக்கு
கால் பிடித்து விடுகின்றனவா என்று

ஒருமுறை சீனத்துக் களிமண் பொம்மை
இங்கு கண்டெடுக்கப்பட்டது.
உடைந்த கையும் சிதைந்த தலையுமாக
சிற்பியின் கைத்திறனை மட்டுமே
உயிர்ப்போடு வைத்திருக்கும்
அந்தப் பொம்மையும்
வந்த கதை போன கதை தெரியாது எனலாம்.

குப்பைகூட்டிக் கொண்டிருந்த
கறுப்புத்துரையோ
    திருமணப் படம் எடுக்க மட்டுமே
    இலவச அனுமதி. கேள்விகள் கேட்க
    கட்டணம் செலுத்த வேண்டும்
என்று
எச்சரித்துவிட்டுப் போனார்.

♦

பாறையில் கரைகிறது சூரியன்

காற்றுவெளி தாண்டிய உயரம்
பூதங்கள் பிரிந்து கழல்கின்றன

இறுகியும் தளர்ந்தும்
மிதந்தும் கரைந்தும்
வடிகிறது உடல்
பூமிக்குப் பின்னால் உள்ள
பாறையில் உருகுகிறது சூரியன்

குறிப்பிட்ட நேரத்தில்
நீ வீடு திரும்புகிறாய்
உள்ளார்த்தமான பிடிப்புகளால்
கொஞ்சம் நீரூற்றுகிறாய்
நீ வாஞ்சையுடன் வளர்த்து வரும்
பிடிப்பின்மைக்கு
உனது எல்லாச் செடிகளிலும்
கட்டப்பட்டுள்ளது கால அளவு.

எரிச்சலோ எதிர்பார்ப்போ இல்லை
மணி பார்க்கும் உன் கண்களில்

மையலோ கலக்கும்
உன் கரங்களின் கவனமெல்லாம்
உன்னைச் சுற்றியே
பாதுகாப்பற்ற இருப்புகளுக்குப்
பழகிவிட்டன உன் இன்மைகள்

நீலத்திலிருந்து பிரிக்க முடியாதுபோன
நேசத்தை எதிர்கொள்ளத் துணியாத
உன்னைத் தேற்றத்
தேடுகிறாய் ஆயுதங்களை
இன்னும் உன்மேல்

ஒட்டிக்கொண்டிருக்கிறது
நீ நீந்தி வந்த வெளியுலகம்

காதலையும் கனிவையும் கோபங்களையும்
எழுத்துகளுக்குத் தின்னக் கொடுத்து
உணர்வுகளின் சிறு தீண்டலும் அற்ற
உன்னோடு அமர்ந்து நீ பேசுகிறாய்
நண்பர்களும் நட்சத்திரங்களும்
அற்ற உன் வானத்தில்

காற்றை மறுத்துப் பறக்கும் என்
சிறகுகளைக் கட்டியிழுக்கின்றன
பாதிப்புகளற்ற உன் காட்சிகள்

இணைய முடியாமலும்
இணைக்க முடியாமலும்
தனித்துப் பிரிகின்றன என் மூலக்கூறுகள்

வடியும் என்னை மீண்டும் வார்க்காதே
செதுக்கும் நோக்கம் உனக்கில்லை
திமிரோ, இரக்கமோ, ஏதோ
இன்னும் ஒட்டிக் கொண்டிருந்தால் வா
காய்களை நகர்த்தாமல்
சதுரங்கம் விளையாடலாம்.

காற்றுவெளி தாண்டிய உயரத்தில்
பூமிக்குப் பின்னால்
பாறையில்
கரைகிறது சூரியன்.

♦

நகர மண்டபமும் ரப்பர் துண்டும்

சாகசம் காட்டும்
வான்குடை வீரர்களில் எத்தனை
பேர் தமிழர்கள்
பாதிக்கு மேலா? முக்கால்வாசியா?

பாடாங் வரைக்கும் கழுத்தை
நீட்டி கணக்குப் பார்க்காதே பதினெட்டு
தூண்களும் வளைந்து
போய்விடும்

சொன்னால் கேட்டால்தானே?

9.8.1966
முதல் தேசிய நாள் அணிவகுப்பில்
தொடங்கிய பழக்கம்

எகத்தாளப் பார்வையோடு
திருட்டுச் சுவிங்கம்
அசை போடுகிறது நகரமண்டபம்.

1939
வெள்ளைக்காரத் துரைகளுக்கு இணையாய்
கறுப்பு இந்திய வீரர்கள்
நாய்நிலை மாறி சமனாய்
நடை பயில்கின்றனர்.

1942
நெடிய வெள்ளையனுக்கும்
குட்டை ஜப்பான்காரனுக்குமாய்
இருபக்கமும் இருளாய்
எதிரெதிரே நின்று
எப்பக்கம் வெல்லும் எப்பக்கம் சாயலாமென
துப்பாக்கிக் குதிரையை அழுத்தாமல்

மனக்குதிரையை அடக்கியபடி
இந்திய வீரர்கள் மோதுகின்றனர்.

6.7.1943
ஜப்பானிய பிரதமர்
ஜெனரல் தோஜோவைப் போற்றி
இந்திய தேசிய ராணுவத்தின்
கம்பீர அணிவகுப்பு.

24.10.1943
பிரிட்டிஷ் பேரரசுக்கும்
அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் எதிராக
போர்க்கொடி பிடிக்கிறார்
சுபாஷ் சந்திரபோஸ்
பேரணி திரண்டு பெருநடை போடுகிறது
பெரும் திரளாய் மக்கள்
உடைமைகள் அளிக்கின்றனர்.

வெள்ளையனே வெளியேறு! ஜெய் ஹிந்த்

15.2.1945
வெள்ளையர், சீனர்,
மலாய்க்காரரோடு இந்தியர்.
லார்ட் மவுண்ட்பேட்டனுடன்
ஜப்பானிய சரணாகதியைக்
கொண்டாடுகிறார்கள்.

எச்சில் துப்பினாலே அபராதம்?
நீ சுவிங்கம் மென்று துப்புகிறாயா
என்றால்

திடலைக் கலைத்துப்போட்ட
கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்கா?

சகதியில் மேடை கட்டிக்கொண்டிருக்கும்
கட்டுமானத் தொழிலாளிகளுக்கா?
வெள்ளைச் சப்பாத்தா? கறுப்புச் சப்பாத்தா?
எந்தச் சப்பாத்தில் நிறைய மண் ஒட்டும்?
பதில் கேள்வி கேட்கிறது.

1959, 1965
மண்டபத்தின் படிகளில் பிரதமர்.

சிங்கப்பூர் தன்னாட்சி பெற்ற நாடாகிறது!

மலாயாவிலிருந்து பிரிந்து
தனி நாடாய்ச் சுதந்திரம் பெறுகிறது!

ஏராளமாய்த் தமிழர்கள்
குதூகலிக்கின்றனர், பயந்தழுகின்றனர்.

அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள்
நீதிபதிகள் அதிகாரிகளாய்த்
தமிழர்கள்
படிகளில் ஏறி இறங்குகின்றனர்.

திரும்பவும் சொல்கிறேன்
சுவிங்கம் துப்பாதே
பட்டதாரித் தமிழர்கள்
படம் பிடிக்க வருகிறார்கள்
ஒட்டிக்கொள்ளப்போகிறது

சுவிங்கம் வாங்கி வரும்
ஜோகூர்த் தமிழனை
இன்னும் காணவில்லையே
திமிரோடு படிகளை ஆட்டுகிறது நகரமண்டபம்.

நாடாளுமன்றக் கூட்டம் முடிந்து
கார் வளைகிறது

போக்குவரத்தைச் சில நொடிகள் நிறுத்துகிறார்
நீல உடைத் தமிழர்

கிடைத்த இடைவெளியில்
விசிலடித்தபடி சிவப்பு விளக்கில்
தெருவைத் தாண்டுகின்றனர்
கறுப்புடையும் காதுத்தோடுமாய்
தமிழ் இளையர்கள்.

கண்டுகொள்ள மாட்டாயா?

அன்றிலிருந்து
இன்று வரைக்கும்
இந்த ரோட்டில் தார் ஊற்றுபவன்
தமிழன்தான்
என்றபடி சன்னல்களால்
பளாரென அறைகிறது நகர மண்டபம்

சிங்கே ஊர்வலம்
சீன தாளத்தில்
மலாய் ஆட்டம்;
தமிழ்ப் பறை மேளத்தில்
வெள்ளையன் வித்தை.
வெளுத்துக்கட்டுகிறான்
'ரோஜாக்' இசைத் தமிழன்

காரில் செல்லும்
கறுப்புக் கண்ணாடித் தமிழன்
உன்னைப் பற்றி
குறிப்பெழுதிக் கொண்டிருக்கிறான்
மாட்டிக்கொள்ளப் போகிறாய்

என் ஒவ்வொரு கல்லிலும்
கூலியின் ரத்தம் ஓடுகிறது

தேசத் துரோகம் செய்வேனா
போ போ!
என்றபடி, மண்டபப் படிகள்
சுரண்டி எடுக்கின்றன
ரப்பர் துண்டை

ஒவ்வொரு ரப்பர் மரத்திலும்
பால் சீவியது கூலி ரத்தமில்லையா?
கேள்விகேட்டபடி
சுரண்டப்பட மறுக்கிறது
ரப்பர் துண்டு

என்னாலா 'சிட்டிஹால்ல'
நின்னு கிஸ் கொடுக்கிறாமாறி
வீடியோ எடுத்துக்கலாம்லா
நாலு வண்ணப் பட்டும்
நீலநிற சூட்டுமாய் வந்து அமர்ந்த
புதுமண ஜோடியின்
பின்புறத்தில் ஒட்டிக்கொள்கிறது
ரப்பர் துண்டு.

♦

தேநீர். மதியம். குவளைகள்.

பொது விடுமுறைநாளில்
வெறிச்சோடிக்கிடக்கும்
சாலைபோன்ற ஒரு பொழுது
வேலை எதுவும் இல்லாதவர்களாய்
எதுவுமற்றுப் பேசிக் கொண்டிருந்தோம்
பாதியில் நிற்கும் அவசர வேலைகள்
கவனமாய்த் தவிர்க்கப்பட்ட கடிகாரங்கள்

காற்றோடு கலந்துகொண்டிருக்கும்
தேநீரின் சுவையாக
கருத்துகள் அவரவருக்குள்
கரைந்து கொண்டிருந்தன
நகைச்சுவை
தொடர்ந்த சிரிப்பு
சிகரெட்
எதுவும் உடைக்கவில்லை சுவர்களை

நான்காவது தேநீரும்
எங்கள் சுவைக்கு இல்லை
பால் அதிகம்

தேநீரிடம் இருந்து விடுபடமுடியாது
போய்விட்ட
நமது சுதந்திரம் பற்றிப் பேச
எவரும் தயாராய் இல்லை என்றாலும்
வேறெதுவும் பேசக் கூடியதாகவும் இல்லை

கேள்விகளும் பதில்களும்
எல்லாருக்கும் தெரிந்தே இருந்தபோதும்
ஒரு நப்பாசை

பொழுதை நிறைத்துக்கொண்டு
சொற்களற்றுத் திரும்புகின்றன
தேநீர்க் குவளைகள்.

♦

கண்ணி வெடி

எல்லைக் கோட்டுக்கு
வந்து விட்டோம்
வந்தது வெற்றியா
வர முடிந்தது தோல்வியா
தெரியவில்லை

எனினும்
இனிதாகப் பிரிந்து
செல்ல வேண்டும் என்பதே
என் ஒரே விருப்பம்

உன் துருப்பிடித்த
ஆயுதங்களை
என் தோளில் மாட்டிவிடாதே

நிம்மதியாய்ச் சிரித்து
என்னை
நிராயுதபாணியாக்கி விடாதே

ஒரு மணி நேர
உரையாடல் முடிந்து
அண்டை நாட்டுப் பிரதமர்களின்
செயலாளர்கள்
கை குலுக்கிக் கொள்வதுபோல்
எல்லாம் இருப்பதாயும்
எதுவுமே இல்லாததாயும்
இலேசாக
விடை கொடு.

♦

குடி உரிமை

பேருந்தின் கடைசி இருக்கையில்
அமர்ந்துள்ள நான்
அவர்கள் மொழி பேசும்
தொலைக்காட்சியையோ
எனக்கருகில் அமரத் தயங்கும்
அந்தக் குழந்தையையோ
குறை சொல்வதற்கில்லை.

அவர்கள் அதிகமாய் உள்ள
கூட்டத்தில் தங்கள் மொழியிலேயே
அறிவிப்புகளை வெளியிடட்டும்
கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளட்டும்
அவர்கள் சிலருக்காக
என் பெருங்கூட்டத்தில்
பொது மொழியில் பேசவும் நான்
தயாராய் உள்ளேன்
எங்கள் மொழி தெரிந்தவர்கள்
மட்டுமே விண்ணப்பிக்கலாம் என
அவர்கள் விளம்பரம் செய்வதிலும்
எனக்கெந்த மறுப்பும் இல்லை
அவர்கள் மொழி பழகவும்
நிறம் பூசவும்
ஆயத்தமாய் உள்ளேன் நான்

எல்லா உரிமைகளும்
உறுதி அளிக்கப்பட்டுள்ள பட்சத்தில்
என் மொழியில் பாட மறுக்கும்
எனது உரிமையை
பிச்சை கேட்டுப் பெற
ஒருபோதும் நான் தயாராய் இல்லை
என்பதை மட்டும்
அவர்கள் உணரட்டும்.

♦

கடந்துபோகும் மேகம்

பவளமல்லி விரியும்
நிறம்பிரியாக் காலை

முடிந்து போனது கதை
என்றார்கள்

சிதறிய காலையில் தெறித்து விழுந்த
ஒரு துண்டு நீரை ஏந்திக் கிளம்பினேன்

கோடையும் மாரியும்
நெய்தலும் மருதமும்
மாறி மாறி
தலையாணங் குருவியாய் அலைந்தேன்

கடல் பிரித்தோடியது பாலை
அதன்
இருபுறமும் பூவரசு
இடையில் சிரிக்கும் செம்பருத்தி
வெள்ளுடை படியும் செம்மண் புழுதியில்
நீறெனப் பூத்தது வாழ்வு

காலொடிந்து பறந்த காலம்

எரிந்த ஊரும் அழிந்த உறவும்
வலி அறியாப் பருவத்தை
துளைத்துச் செல்ல
நரம்பில் வழிந்தது வெண்குருதி
அதன் வெள்ளத்தில் எழுந்த
பெரும் புகார் அடித்துப் போக
ஏழு நிலம் தாண்டி வந்து விழுந்தேன்

மரம் செழித்த நகர்க் காடு
கடலோர மருத நிலம்
நிலம் உழ செழித்தேன்
விதை விழ விளைந்தேன்

எனினும்
நீரின் மணமோ மண்ணின் நிறமோ
கொள்ளாத வாழ்வுக்கு
பருவக் காற்றைத் தழுவிச் செல்லும்
இலக்கு இல்லை

கடந்து செல்லும் வானங்களை
வெற்றிகொள்ளும் ஆசை
இருந்ததில்லை எப்போதும்

காலப்பெருநிலத்தின் மக்களை
வேரிலும்
அவர்கள் மொழியை
உயிரிலும் தாங்கி
புலம் பெயர் சோகமின்றி
அலைந்துழலும் நோவுமின்றித்
திரிந்தேன் நான்.

♦